Registered as a news paper.

பக்கங்கள்: பன்னிரண்டு

விலை ரூபா 10.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர்:04 திருவள்ளுவர் ஆண்டு: 2036 மார்கழி 29 ஹிஜ்ரி 1426 துல்ஹஜ் 12 (13.01.2006) வெள்ளிக்கிழமை இதழ் 105

யாழ்.நகரில் தனித்துவமான
கலைநயம் மிக்க துல்லியமான
அச்சுவேலைகளுக்கு
SP சிறந்த இடம்
சுரபி பதிப்பகம்
267, நாவலர் வீதி யாழ்ப்பாணம்.

# கிளைமோர் தாக்குதலில் 10 கடற்படையினர் பலி!



தாக்குதலுக்குள்ளான பஸ்



கொழும்புக்கு கொண்டுவரப்படும் கடற்படையினரின் சடலங்கள்

## செட்டிகுளத்தில் சம்பவம்

வவுனியா—

வவுனியா-செட்டிகுளம் வீதியில் கடற்படையினரின் வாகனத் தொடரணி மீது நேற்று மாலை நடத்தப்பட்ட கிளைமோர் தாக்குதலில் 10 கடற்படையினர் கொல்லப்பட்டதுடன் - மேலும் 12 கடற்படையினர் காயமடைந்தனர்.

மன்னார் - மதவாச்சி வீதியில் செட்டிகுளத்துக்கும் அடப்பன் குளத்துக்கும் இடையில் சிலுவைச் சந்தியில் நடந்த இந்தத் தாக்குதலை அடுத்து, கடற்படையினர் நடத்திய தாக்குதலில் ஊர்காவற் படையைச் சேர்ந்த ஒருவர் கொல்லப்பட்டதுடன் இரு பொதுமக்கள் காயமடைந்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது - கடற்படையின் வடமத்திய பிராந்தியத் தலைமையகமான புனாவ கடற்படைத் தளத்தில் இருந்து நேற்று மாலை 3.30 மணியளவில் கடற்படையினரின் வாகனத் தொடரணி ஒன்று மன்னார் நோக்கிப் புறப்பட்டது.

விடுமுறைகளை முடித்துத் தளம் திரும்பிய கடற்படையினரை மன்னாரில் உள்ள கடற்படைமுகாம்களுக்கு ஏற்றிச் சென்ற 6 பஸ்கள் கொண்ட தொடரணி மீது - (12 ஆம் பக்கம் பார்க்க)

## தொண்டர் நிறுவனங்களுடன் தமிழ்ச்செல்வன் சந்திப்பு!

கிளிநொச்சி—

அரச படைகளின் கெடுபிடிகள் மற்றும் வன்முறைகளால் இடம்பெயரும் மக்கள் தொடர்பாக வன்னியில் உள்ள சர்வதேச தொண்டர் நிறுவனங்களுடன் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் கலந்துரையாடவுள்ளார்.

இராணுவத்தினரின் தாக்குதல்கள், கைதுகள், பாலியல் வல்லுறவுகள், துன்புறுத்தல்கள் ஆகியவற்றால் அச்சமடைந்து இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியிலிருந்து வன்னிப்பகுதிக்கு மக்கள் இடம்பெயர்ந்து வருகின்றனர்.

இது குறித்து ஆலோசனை நடத்தவே சர்வதேச தொண்டர் நிறுவனங்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. கிளிநொச்சியில் தமிழீழ விடுதலைப் புலிகளின் திட்டமிடல் செயலகத்தில் இன்று காலை 9 மணிக்கு இந்தக் கலந்துரையாடல் நடைபெறவுள்ளது.

இதேவேளை, இராணுவ வன்முறைகளால் அச்சமடைந்த மக்கள் யாழ். குடாநாட்டிலிருந்து இடம்பெயர்ந்து வருகின்றனர்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## இந்த மாத இறுதியில் பாலசிங்கம் வருவாராம்!

### கொழும்புப் பத்திரிகை தகவல்

கொழும்பு—

விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் இந்த மாத இறுதியில் இலங்கைக்கு வரக்கூடும் என கொழும்பு ஆங்கில நாளிதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இந்த மாத இறுதியில் நோர்வே அமைச்சர் எரிக் சொல்ஹெய்மும் இலங்

புலிகளுடன் முக்கிய பேச்சுக்களை நடத்தவுள்ளார்.

இந்த நிலையில் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் பண்டாரநாயக்க விமானநிலையம் ஊடாக கிளிநொச்சி செல்வதற்கான பயண ஒழுங்குக்கு அனுமதி கோரியுள்ளதாக உறுதிப்படுத்தப்படாத செய்திகள் தெரிவிப்பதாக கொழும்பு நாளிதழ் தெரிவிக்

### கிரனேட் வீச்சையடுத்து

## படையினரின் துப்பாக்கிச்சூட்டில் ஐந்து பொதுமக்கள் படுகாயம்!

யாழ்ப்பாணம்—

யாழ். பரமேஸ்வராச் சந்தி - மற்றும் தட்டாதெருச் சந்திப் பகுதிகளில் நேற்று நடத்தப்பட்ட கைக்குண்டுத் தாக்குதல்களில் 3 பொலிஸாரும், ஒரு இராணுவச் சிப்பாயும் காயமடைந்ததையடுத்து இராணுவத்தினர் மேற்கொண்ட கண்மூடித்தனமான துப்பாக்கிப் பிரயோகத்தில் 5 பொதுமக்கள்



ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் இந்த மாத இறுதியில் இலங்கைக்கு வரக்கூடும் என கொழும்பு ஆங்கில நாளிதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இந்த மாத இறுதியில் நோர்வே அமைச்சர் எரிக் சொல்ஹெய்ம் இலங்கைக்கு வருகை தரும் நிலையில் அவருடன் பேச்சுக்களை நடத்த பாலசிங்கமும் இலங்கைக்கு வரக்கூடும் என்று கூறப்படுகின்றது.

ஜனவரி 23 ஆம் திகதி இலங்கை வரும் எரிக் சொல்ஹெய்ம், அரசாங்கம் மற்றும் தமிழீழ விடுதலைப் ...

இந்த நிலையில் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் பண்டாரநாயக்க விமானநிலையம் ஊடாக கிளிநொச்சி செல்வதற்கான பயண ஒழுங்குக்கு அனுமதி கோரியுள்ளதாக உறுதிப்படுத்தப்படாத செய்திகள் தெரிவிப்பதாக கொழும்பு நாளிதழ் தெரிவித்துள்ளது.

இம்முறை கிளிநொச்சி செல்லும் எரிக் சொல்ஹெய்ம் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனை சந்திக்கவுள்ளதாகவும் அந்த சந்திப்பில் பாலசிங்கமும் பங்கேற்பார் என்றும் கூறப்படுகிறது. (12 ஆம் பக்கம் பார்க்க)

யாழ்ப்பாணம்

யாழ். பரமேஸ்வராச் சந்தி - மற்றும் தட்டாதெருச் சந்திப் பகுதிகளில் நேற்று நடத்தப்பட்ட கைக்குண்டுத் தாக்குதல்களில் 3 பொலிஸாரும், ஒரு இராணுவச் சிப்பாயும் காயமடைந்ததையடுத்து இராணுவத்தினர் மேற்கொண்ட கண்மூடித்தனமான துப்பாக்கிப் பிரயோகத்தில் 5 பொதுமக்கள் படுகாயமடைந்தனர்.

நேற்றுக்காலை இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் கொக்குவிலைச் சேர்ந்த நாகேஸ்வரி சுகந்தினி (வயது 28), நாவற்குழியைச் சேர்ந்த நாகலிங்கம் இராஜகுமார் (வயது 16), திருநெல்வேலியைச் சேர்ந்த விஸ்வநாதன் கதிர்காமத்தம்பி (வயது 60), காரைநகரைச் சேர்ந்த முருகேசு சுந்தரலிங்கம் (வயது 56), ந.சச்சிதானந்தன் (வயது 71) ஆகியோரே படையினரின் துப்பாக்கிச்சூட்டுக்கு (12 ஆம் பக்கம் பார்க்க)



## பதிவுசெய்ய கோரிக்கை

கிளிநொச்சி

தமிழர் தாயகப் பகுதிகளில் அரச படைகளால்கைது செய்யப்பட்டோர், காணாமற் போனோர், பாலியல் ரீதியாக துன்புறுத்தப்பட்டோர் தொடர்பான விபரங்களை வடக்கு- கிழக்கு மனித உரிமைகள் செயலகத்தில் பதிவு செய்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (12 ஆம் பக்கம் பார்க்க)

## விவசாயி அடித்துக்கொலை

திருகோணமலை

திருகோணமலை மாவட்டம் - லிங்கநகர்ப் பகுதியில் நேற்று முன்தினம் காலை தமிழ் விவசாயி ஒருவர் அவரது வயலில் வைத்து அடித்துக் கொல்லப்பட்டார்.

நாற்பது வயதுடைய தனபாலசிங்கம் என்பவரே படையினரால் அடித்துக்கொல்லப்பட்டவராவார். இது தொடர்பாக யுத்த நிறுத்தக்கண்காணிப்புக் (12 ஆம் பக்கம் பார்க்க)

# வன்முறைச் சம்பவங்களை உடனடியாக நிறுத்துங்கள்!

## சர்வதேச மன்னிப்புச் சபை அவசர வேண்டுகோள்

கொழும்பு

இலங்கையின் வடக்கு - கிழக்குப் பகுதிகளில் கடத்தல்கள், கொலைகள், காணாமற்போவோர் எனத் தொடரும் வன்முறைச் சம்பவங்களை அனைத்துத் தரப்பினரும் உடனடியாக நிறுத்தவேண்டுமென சர்வதேச மன்னிப்புச் சபை வேண்டுகோள் விடுத்துள்ளது.

சர்வதேச மன்னிப்புச்சபையின் ஆசிய பசுபிக் பிராந்திய ஒருங்கிணைப்பாளர் பூர்ணசென் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது -

கடந்த ஒரு மாதத்தில் மட்டும் 40 பொதுமக்கள், 60 அரசபடையினர் என நூற்றுக்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டுள்ளனர்.

மட்டக்களப்பில் புனித மரியாள் தேவாலயத்தில் நத்தார் ஆராதனையில் ஈடுபட்டிருந்த நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் படுகொலை செய்யப்பட்ட பயங்கர செய்தி எம்மை மிகவும் அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது.

தொடர்ந்து ஜனவரி 2 ஆம் திகதி மாணவர்கள் ஐந்து பேர் திருகோணமலையில் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். இந்த மாணவர்கள் தங்கள் மீது கைக்குண்டு வீசியதால் கொல்லப்பட்டதாக முதலில் இராணுவத்தரப்பு தெரிவித்திருந்த போதும் - மூவரது தலையில் துப்பாக்கிச்சூட்டு அடையாளங்கள் இருப்பதை மருத்துவ பிரேத பரிசோதனை அறிக்கை உறுதிப்படுத்தியுள்ளது. இது தொடர்பாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும் விசாரணைக்கு உத்தரவிட்டுள்ளார். (12 ஆம் பக்கம் பார்க்க)

## பருத்தித்துறையில் படையினரின் சூட்டில் வயோதிபர் பலி!

பருத்தித்துறை


பருத்தித்துறையில் படையினர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் வயோதிபர் ஒருவர் உயிரிழந்த ர்.

பருத்தித்துறை- முதலாம் கட்டைச்சந்திக்கு அண்மையில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் துன்னாலையைச் சேர்ந்த கணபதி முருகேசு (வயது 70) என்ற வயோதிபரே உயிரிழந்தவராவார்.

ஓய்வு பெற்ற தபால் அதிபரான இவர் - நேற்றுக்காலை பருத்தித்துறையில் உள்ள வங்கியில் தனது ஓய்வூதியத்தைப் பெற்றுக்கொண்டு சைக்கிளில் வீடு திரும்பிக்கொண்டிருந்தபோது, முதலாம் கட்டைச் சந்திக்கும் கிராமக்கோட்டுச்சந்திக்கும் இடைப்பட்ட பகுதியில் வைத்து படையினரால் சுடப்பட்டார். (12 ஆம் பக்கம் பார்க்க)

ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள்....
021-222 3891, 222 6297, 077-2349999, 011-2372952/3, 011 - 2360290/1
EXPOAIR
email:jaffna@expoavi.com, reservations@expoavi.com.
your friend in the skies...
இலங்கையில்
முன்னணி வகிக்கும்
உங்கள் உள்ளூர்
விமாசேவை...

# 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி



| அமரர் | அமரர் | அமரர் |
| --- | --- | --- |
| அற்புததேவன் காங்கேசன் | முத்துக்கிருஸ்ணன் அற்புததேவன் (மாயவர்) | அற்புததேவன் யதிசன் (2004 A/L) |
| அன்னை மடியில்: 1982.08.16 | அன்னை மடியில்: 1951.12.25 | அன்னை மடியில்: 1986.09.27 |
| ஆண்டவனடியில்: 2004.12.26 | ஆண்டவனடியில்: 2004.12.26 | ஆண்டவனடியில்: 2004.12.26 |

ஆண்டு ஒன்று சென்றதைய்யா – நீங்கள்
சென்று – ஆண்டு பல சென்றாலும்
ஆறாதையா எம் துயரம்.

தாவடி வடக்கு,
கொக்குவில்.

(2165)

தகவல்
குடும்பத்தினர்

உழவர் பெருநாளாம்

# தைத்திருநாள் பெருவிழா



இடம்: பொது விளையாட்டு மைதானம். கிளிநொச்சி.

காலம்: 2006-01-14(சனிக்கிழமை)

நேரம்: நண்பகல் 12.00 மணி.

அனைவரையும்
அன்புடன் அழைக்கிறோம்.

நிகழ்ச்சி நிரல்:

களநிகழ்வுகள்

மங்கல விளக்கேற்றல்
தேசியக்கொடியேற்றல்
பண்பாட்டுப்பொங்கல் நிகழ்வு
பண்பாட்டு அணிவகுப்பு
தொடக்கம் பி.ப.2.00 மணி
தொடங்கும் இடம்-கரடிப்போக்குச்சந்தி

அரங்க நிகழ்வு

தொடக்கம் பி.ப.3.00 மணி
அகவணக்கம்
தமிழின்னியம் வாழ்த்திசை
தலைமையுரை
சிறப்பு விருந்தினர் உரை
கலைநிகழ்வுகள்
நன்றியுரை

இயற்கைக்கு நன்றி கூறுவோம்.
உழவரை வாழ்த்துவோம்.

பொங்கல் விழா ஏற்பாட்டுக்குழு
நிதித்துறை.
தமிழீழ விடுதலைப்புலிகள்.

# உயிர்காக்க உதவுங்கள்



யாழ்ப்பாணம் —

கைதடி தச்சன் தோப்பைச் சேர்ந்த வி.யசிந்தன் என்ற 11 வயதுச் சிறுவனுக்கு NEO BLADDER CONSTRVCTION சத்திர சிகிச்சை செய்ய வேண்டியுள்ளது. இதனை விரைவில் செய்துகொள்ளுமாறு கொழும்பு அப்பலோ வைத்தியசாலை சிபாரிசு செய்துள்ளது. இதற்கு 2 இலட்சம் ரூபா தேவைப்படுகிறது. வறுமைக் கோட்டின் கீழ் வாழும் இந்தக் குடும் பத்தால் இந்தச் செலவை ஏற்க முடியா ததால் பொது மக்களின் உதவியை நாடியுள்ளது.

இந்தச்சிறுவனைக் காப்பாற்ற பண உதவி வழங்குமாறு கொடை வள்ளல்களை சாவகச்சேரி லயன்ஸ் கழகம் கோருகின்றது. உதவி செய்ய விரும்புவோர் பணத்தை சாவகச்சேரி மக்கள் வங்கி கிளையில் 257-024535-2 என்ற கணக்கிலக்கத்தில் வைப்புச் செய்யுமாறு கோரப்படுகிறது.

---



சாவகச்சேரி - மடுப்பதி கண்டி வீதியைச்சேர்ந்த பா.ரோயல்குமார் என்ற 22 வயது இளைஞன் APLASTIC ANAEMIA என்ற நோயால் பீடிக்கப்பட்டுள்ளார். இதற்கான எலும்பு மச்சை மாற்றீட்டுச் சத்திரசிகிச்சையை மேற்கொள்வதற்கு ரூபா 22 இலட்சம் பெரும் தொகைப் பணம் தேவைப்படும் எனவும் அதற்கு மாற்றுச் சிகிச்சையான ANTIHYMO-CYLE GLOBULIN, CYCLOSPOR-INE ஆகிய மருந்துகளைப் பயன்படுத்த வேண்டும் எனவும், யாழ் போதனா வைத்தியசாலை அறிவித்துள்ளது.

இந்த மருந்துகளின் கொள்வனவுக்கும் 12,50,000 ரூபா தேவைப்படுவதாக யாழ்.போதனா வைத்தியசாலை வைத்திய நிபுணர் Dr. சிவசுதன் அறிவித்துள்ளார். வறுமைக்கோட்டுக்குக் கீழ் வாழும் இந்தக்குடும்பத்தால் இந்த மருந்துகளை பணம் கொடுத்து வாங்குவது இயலாத காரியம் ஆகையால் இந்த இளைஞனைக் காப்பாற்றப் பண உதவி வழங்குமாறு சாவகச்சேரி லயன்ஸ் கழகம் கோருகின்றது.

பண உதவி செய்ய விரும்பும் கொடையாளர்கள் மக்கள் வங்கியின் சாவகச்சேரி கிளையின் 207-024534-0 என்ற கணக்கு இலக்கத்தில் பணத்தை வைப்புச்செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

## திருவாதிரை உற்சவம்

மானிப்பாய் —

நவாலி அட்டகிரி திருச்சாத்தான் மலைப்பதி ஸ்ரீ விசாலாட்சி அம்பாள் சமேதவிஸ்வநாத சுவாமி தேவஸ்தானத்தின் திருவாதிரை உற்சவம் இன்று நடைபெறவுள்ளதாக ஆலயத்தின் பிரதமகுரு கா.துரைச்சாமிக் குருக்கள் தெரிவித்தார்.

காலை 5.30 மணிக்கு அபிஷேகம், விசேட பூஜை, திருவூஞ்சல் என்பனவற்றைத் தொடர்ந்து எம்பெருமான் புதிதாக அமைக்கப் பெற்ற அழகிய ரதத்தில் எழுந்தருளி அருள் பாலிக்கவுள்ளார். (100)

## சனசமூக நிலைய கட்டடத் திறப்பு விழா

நயினாதீவு —

நயினாதீவு - ஸ்ரீஞான வைரவர் சனசமூக நிலையக் கட்டடத் திறப்பு விழாவும் பரிசளிப்பு விழாவும் நாளை நடைபெறவுள்ளது.

இந்தக் கட்டடம் பிற்பகல் 3.30 மணி தொடக்கம் 5.20 வரையுள்ள சுபவேளையில் இ.சோமசுந்தரத்தினால் திறந்து வைக்கப்படவுள்ளது. அன்றையதினம் முன்பள்ளி மாணவர்களுக்கான விளையாட்டுப் போட்டியில் வெற்றிபெற்றோருக்கான பரிசில்களை மு.சத்தியசீலன் வழங்கவுள்ளார்.

## "கடலலைகள் கொஞ்சும் நகர்" நூல் வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம் —

கலையார்வன் கு.இராயப்புவின் "கடலலைகள் கொஞ்சும் நகர்" எனும் நூல் வெளியீட்டு விழா எதிர்வரும் 15ம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4.30மணிக்கு குருநகர் கார்மேல் மண்டபத்தில் அ.ஜேசுராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்ந நிகழ்வில் வரவேற்புரையை திருமதி மெரியாசீலன், ஆசியுரையை அருட்கலாநிதி அ.ஜெயசேகரமும் நூலின் நயப்புரையை யாழ்.கோட்டக் கல்விப் பணிப்பாளர் எஸ்.தங்கராஜா நிகழ்த்தவுள்ளார்.

## கூட்டம் ஒத்திவைப்பு

யாழப்பாணம் —

யாழ்.நகர திட்டமிடல் தொடர்பாக, எதிர்வரும் 16ம் திகதி காலை 10 மணிக்கு யாழ்.செயலகத்தில் நடைபெறும் என அறிவிக்கப்பட்ட கூட்டம் - தவிர்க்கமுடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளதாகவும் கூட்டம் நடை பெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும் எனவும் அரச அதிபர் கே. கணேஷ் தெரிவித்தார்.


நாகம்ஸ் சுன்னாகம்

14 முதல் பொங்கல்
அதிரடி வெளியீடு

விஷால்,
மீராஜெஸ்மின்
மற்றும் பலர் நடிப்பில்

சண்டைக் கோழி



காட்சிகள்:- காலை 10.30, 2.30,5.30 (பு.நே)

# அமைச்சர்களின் எண்ணிக்கையை குறைக்க ஜனாதிபதி மகிந்த முயற்சி!



கொழும்பு—

அமைச்சரவை அந்தஸ்து இல்லாத அமைச்சர்கள், பிரதியமைச்சர் என இரு பதவிகளை வகிக்கும் அமைச்சர்கள் ஒரு பதவியிலிருந்து விலகுமாறு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கோரியுள்ளதாக கொழும்புத் தகவல்கள் தெரிவித்தன.

ஜனாதிபதி ராஜபக்ஷ தலைமையில் அமைச்சரவை கடந்த செவ்வாய்க்கிழமை கூடியவேளை, ஜனாதிபதி இந்த வேண்டுகோளை விடுத்தார். அமைச்சரவை அந்தஸ்தற்ற அமைச்சர், மற்றும் பிரதி அமைச்சர் பதவிகள் இரண்டில் ஏதாவது ஒன்றில் இருந்து விலகிக்கொள்ளுமாறே ஜனாதி பதி கேட்டுள்ளார்.

கடந்த செவ்வாய்க்கிழமை அலரி மாளிகையில் இடம்பெற்ற அமைச்சரவைக்கூட்டத்தில் அமைச்சரவை அந்தஸ்தற்ற அமைச்சர்கள் பலரும் கலந்துகொண்டனர். (தே)

# மனித உரிமைகள் ஆணைக்குழு கொட்டகதெனியவுக்கு கண்டனம்

கொழும்பு—

தேசிய பொலிஸ் ஆணைக்குழு அதிகாரங்களை பொலிஸ்மா அதிபரிடம் ஒப்படைத்தமைக்கு ஆசிய மனித உரிமைகள் ஆணைக்குழு கண்டனம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக அந்த அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில் -

தேசிய பொலிஸ்மா ஆணைக்குழுவினது அதிகாரத்தை பொலிஸ்மா அதிபருக்கு கையளிக்க பாதுகாப்பு அமைச்சின் ஆலோசகர் கொட்டகதெனியாவுக்கு என்ன அதிகாரம் உள்ளது? இலங்கையின் அரசியல் யாப்பை இவர் மீறியுள்ளார்.

பாதுகாப்பு அமைச்சர் அல்லது ஜனாதிபதி தான் அரசியல் யாப்பின் கீழான ஆணைக்குழுவின் அதிகாரங்களை மாற்ற முடியும்.

அரசியல் யாப்பின் 17 ஆவது திருத்தத்தின்படி பொலிஸ் நியமனங்கள் மற்றும் இடமாற்றங்களை பொலிஸ் ஆணைக்குழு தான் செயற்படுத்த வேண் டுமே தவிர பொலிஸ்மா அதிபர் இல்லை. கொட்டகதெனியாவின் இந்த அறிவிப்பு கடும் கண்டனத்துக்குரியது.

பொலிஸ்மா அதிபருக்கு அதிகாரங்களை மாற்றியளித்ததை கொட்டகதெனியா திரும்பப் பெறவேண்டும். அல்லது பதவி விலக வேண்டும் என்று அந்த அமைப்பு வலியுறுத்தியுள்ளது.



# இலங்கைக்கு பயணம் செய்வதை தவிர்க்க பிரிட்டன் ஆலோசனை!

கொழும்பு—

இலங்கையின் வடக்கு - கிழக்கு பகுதிகளில் அரசியல் வன்முறைகள் தீவிரமடைந்திருப்பதால் அப்பகுதிகளுக்குப் பயணம் செய்வதைத் தவிர்த்துக் கொள்ளுமாறு பிரிட்டன் அரசு தனது நாட்டினரை எச்சரித்துள்ளது.

இது தொடர்பாக பிரிட்டனின் வெளிநாட்டமைச்சு வெளியிட்டுள்ள அறிவுறுத்தலில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது -

அவசிய தேவை, இருந்தால் மட்டுமே இலங்கையின் வடக்கு-கிழக்கு பகுதிகளுக்குப் பயணம் மேற்கொள்ளுங்கள். குறிப்பாக வடக்கு- கிழக்குப் பகுதிகளில் அரசியல் வன்முறைகளும், குழப்ப நிலையும் காணப்படுகிறது.

நிலைமைகளை உன்னிப்பாக அவதானித்துச் செயற்படுங்கள். அரசியல் கூட்டங்களிலும், ஆர்ப்பாட்டங்களிலும் கலந்து கொள்வதைத் தவிர்த்துக் கொள்ளுங்கள். நாட்டில் அவசரகாலச் சட்டமும் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

இது அரசாங்க அதிகாரிகளுக்கு பரந்தளவு அதிகாரத்தை வழங்குகிறது. எனவே, அரசினதும், படையினரதும் அறிவுறுத்தல்களை கவனமாகப் பின் பற்றுமாறு வலியுறுத்தப்படுகின்றீர்கள். 2004 ஆம் ஆண்டு டிசம்பரில் ஏற்பட்ட சுனாமி காரணமாக 30 ஆயிரத்துக்கும் அதிகமான பொதுமக்கள் உயிரிழந்ததுடன் நாட்டின் நான்கு திசைகளினதும் கரையோரங்கள் பெரும்பாதிப்புக்குள்ளாகின.

இதன்போது பாதிக்கப்பட்ட விடுதிகள் மற்றும் வசதிகள் மீள புனரமைக்கப்பட்டுள்ள போதிலும், அப்பகுதிக்கான சுற்றுலாத்துறை வசதிகளை உறுதிப்படுத்திய பின்னரே உங்கள் பயணத்தைத் திட்டமிடுங்கள்.

இலங்கைக்குப் பயணம் மேற்கொள்ளும் பிரித்தானியாவைச் சேர்ந்தோர் எதிர்நோக்கும் பொதுவான பிரச்சினை கடவுச்சீட்டுக்களை தொலைப்பதும், உடல்நிலை பாதிக்கப்படுவது மாகும். இலங்கைக்குப் பயணம் மேற்கொள்ள முன்னர் கட்டாயமாக மருத்துவக் காப்புறுதியை பெற்றுக்கொள்ளுமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

# உடனடியாகப் பேச்சுக்களை ஆரம்பிக்க வேண்டும்!

## ஆசிய அபிவிருத்தி வங்கி வேண்டுகோள்

கொழும்பு—

இலங்கை அரசாங்கமும்-விடுதலைப் புலிகளும் உடனடியாகப் பேச்சுக்களை நடத்த முன்வரவேண்டும் என்று ஆசிய அபிவிருத்தி வங்கி அவசர வேண்டுகோள் விடுத்துள்ளது.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் வதிவிடப் பிரதிநிதி அலெஸ் சான்ட்ரோ பயோ இது தொடர்பாகக் கூறியுள்ளதாவது:-

நாட்டின் பாதுகாப்பு நிலைமைகள் தொடர்ந்து சீர்குலைந்தால் வடக்கு - கிழக்கில் தேவையான அபிவிருத்திப் பணிகளை முன்னெடுக்கமுடியாது. வன்முறைகள் அதிகரிப்பது குறித்து நாம் கவலைகொள்கிறோம்.


இரு தரப்பினரும் உட்கார்ந்து பேசித் தீர்வுகாண வேண்டும். இந்தச் சூழ்நிலை தொடர்ந்தால் இலங்கைக்கான ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவிகள் பாதிக்கப்படும்.

வடக்கு-கிழக்கில் அரசாங்கம் மற்றும் விடுதலைப் புலிகளின் உதவியுடன் பாரிய அபிவிருத்திப் பணிகளை நாம் மேற்கொண்டுவருகிறோம். இரு தரப்பினருமே நிலைத்த அமைதிக்குப் பொறுப்பானவர்கள்.

போரால் பாதிக்கப்பட்ட பகுதிகள் பெருந்தொகையான அன்னிய முதலீடு உதவியுடன் திட்டங்கள் செயற்படுத்தப்பட்டுவரும் நிலையில் - தற்போதைய வன்முறைச் சூழலால் அந்தப் பணிகள் பாதிப்படையும் என அவர் மேலும் தெரிவித்தார்.

# போர்நிறுத்த உடன்பாடு மூலம் பாதுகாப்பை பலப்படுத்தலாம்!

## எதிர்க்கட்சித் தலைவர் ரணில்



கொழும்பு—

போர்நிறுத்த உடன்படிக்கையின் மூலம் பாதுகாப்புத் துறையைப் பலப்படுத்தும் அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

தேசிய ஊழியர் சங்கச் செயற்குழுக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில் -

போர்நிறுத்த உடன்படிக்கையின்மூலம் படையினரின் முகாம்களைப் பாதுகாத்துக் கொள்ள எமக்கு அதிகாரமுள்ளது. குறித்த பிரதேசங்களில் நிலக்கண்ணிவெடிகள் இருக்குமாயின் அவற்றை அகற்றும் அதிகாரமுள்ளது. கடலில் பயணிக்கும் படகுகள் கடற்படையினரின் கட்டளைக்கு இணங்காவிடின் அவற்றுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க அதிகாரமுள்ளது.

இந்த அதிகாரங்கள் அனைத்தும் போர்நிறுத்த உடன்படிக்கையில் உள்ளன. இவை எமது ஆட்சிக் காலத்தில் கடைப்பிடிக்கப்பட்டன. தற்போது இது குறித்து குறைகூறி எவ்வித பயனும் இல்லை எனத் தெரிவித்தார்.

# பணிபுரியும் இடங்களிலேயே வசிக்கவேண்டும்!

## கிராம அலுவலர்களுக்கு புதிய கட்டுப்பாடு

கொழும்பு—

அனைத்துக் கிராம அலுவலர்களும் எதிர்வரும் காலங்களில் தாம் பணியாற்றும் பிரதேசத்திலேயே வசிக்கவேண்டுமென, பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு தீர்மானித்துள்ளது.

இதுகுறித்த விசேட ஆலோசனைகள் அடங்கிய சுற்றறிக்கை அனைத்துப் பிரதேச செயலாளர்களுக்கும் அனுப்பப்படவுள்ளது.

இலங்கை முழுவதும் பணியாற்றும் 14 ஆயிரம் கிராம அலுவலர்கள் இந்த சுற்றறிக்கையின்படி தாம் பணியாற்றும் பகுதிகளிலேயே வசிக்கவேண்டும். இதுவரை காலமும் கிராம அலுவலர்கள் பணியாற்றும் இடம், வசிக்கும் இடம் என இரண்டு பகுதிகளில் இருந்ததால் பொது மக்கள் பெரும் அலைச்சலைச் சந்தித்ததாக அமைச்சுக்குகிடைத்த முறைப்பாடுகளை அடுத்தே அமைச்சு புதிய நடை முறையை கிராம அலுவலர்கள் பின்பற்ற வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கிராமஅலுவலர்கள் தமது அலுவலகங்களில் தங்கியிருக்க வேண்டிய இரண்டு நாட்களில் தமது அலுவல்களாக வெளியே செல்வதால் அரச கருமங்களை நிறைவேற்ற பொதுமக்கள் நீண்ட நாட்களை செலவழிக்க வேண்டி ஏற்படுகின்றது.

இதனால், அத்தியாவசிய தேவைகளை நிறைவேற்றக் கூடமுடியாத நிலையில் மக்கள் உள்ளனர். சில பிரதேச செயலாளர்களும் கிராம சேவையாளர்களின் செயற்பாட்டை உரியவிதமாக கண்காணிக்காமையால், கிராமசேவகர்களுக்கும் மக்களுக்குமிடையேயான தொடர்புகள் குறைவது போன்ற விடயங்கள், கிராமிய நிர்வாகம் செயலிழப்பதற்கு காரணமெனவும், அதனால் கிராம அலுவலர் அரசின் ஒரேநிர்வாக அதிகாரி என்ற வகையில் தமது பணியாற்றும் பகுதியிலேயே வசிக்கவேண்டுமென சுற்றறிக்கையில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

இந்த நடைமுறையை செயற்படுத்துவதற்கு தேவையான செயற்திட்டங்களைத் தயாரிப்பதற்கு அமைச்சு தீர்மானித்துள்ளதுடன், அதன் முதல்நடவடிக்கையாக அனைத்து கிராம அலுவலர்களுக்கும் அலுவலகங்களை அமைப்பதற்க்கு அமைச்சர் கலாநிதி சரத் அமுனுகம அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார். (தே)

# வேட்புமனுக்களை ரத்துசெய்ய நாடாளுமன்றத்தில் சட்டமூலம்!

கொழும்பு—

வடக்கு- கிழக்கில் உள்ளூராட்சி சபைகளுக்காக அழைக்கப்பட்ட நியமனப் பத்திரங்கள் அனைத்தையும் இரத்துச்செய்யும் வகையில் சட்டமூலம் ஒன்றை நாடாளுமன்றில் சமர்ப்பிக்க அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

அமைச்சரவை கடந்த திங்கட்கிழமை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையில் கூடிய போது அதற்கான அங்கீகாரம் கிடைக்கப்பெற்றதாக தெரிவிக்கப்படுகிறது.

வடக்கு - கிழக்கில் 70 உள்ளூராட்சி மன்றங்கள் செயற்பட்டு வருகின்றன. இவற்றில் 53 உள்ளூராட்சி மன்றங்களுக்கே நியமனப்பத்திரங்கள் தாக்கல் செய்யப்பட்டிருக்கின்றன. எதிர்வரும் 20 ஆம் திகதிக்கு முன்னர் நாடாளுமன்றத்தில் இந்தச் சட்டமூலத்தைக்கொண்டு வந்து அதற்கு அங்கீகாரம் பெறுவதற்கும், அதன்பின்னர் நாட்டின் உள்ளூராட்சி சபைக்கு ஒரே நாளில் தேர்தல் நடத்துவதற்கும் அமைச்சரவைக் கூட்டத்தில் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

நாட்டில்தற்போது 311 உள்ளூராட்சி மன்றங்கள் செயற்பட்டு வருகின்றன. இதனைத் தவிர 24 உள்ளூராட்சி மன்றங்கள் புதிதாக உருவாக்கப்படுவதற்கும் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. இதில் ஐந்து நகரசபைகளும் அடங்கும்.

இதேவேளை, உள்ளூராட்சி சபை மன்றங்களுக்கான தேர்தல் ஏப்ரல் மாதம் 15ஆம் திகதிக்கு முன்னர் நடத்தப்பட வேண்டும் என்ற நிலையில் மார்ச் இறுதிக்குள் தேர்தல் நடத்தப்படலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (01)

# புலிகளின் நடவடிக்கையைத் தடுக்க இந்தியாவிடம் உதவிகோரும் இலங்கை

கொழும்பு—

விடுதலைப்புலிகளின் கடல் பகுதி நடவடிக்கைகள் குறித்து இந்திய கடற்படையிடம்இலங்கை கடற்படை உஷார்படுத்தியுள்ளது.

நேற்றுமுன்தினம் நடந்த கடல் பாதுகாப்பு தொடர்பான கருத்தரங்கில் இந்தத் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தமான், நிகோபார் கடற்படை பிரிவு தலைமை அதிகாரி மற்றும் இந்திய கடற்படை உயர் அதிகாரிகளிடம் இலங்கை கடற்படை அதிகாரி ஜே.எஸ். கே.கொலம்பகே விளக்கமாக எடுத்துக் கூறினார்.

இந்தக் கருத்தரங்கில் கடற்படை அதிகாரி விஜய் குணரத்ன பேசுகையில் -

இந்தியாவுடன் கடல் பாதுகாப்பில் ஏற்கனவே இணைந்து பணியாற்றிய அனுபவம் எங்களுக்கு உண்டு. புலிகள் எம்மை தாக்கமுற்பட்டால், அதை தடுக்க அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டும் என்றார்.

இலங்கை கடற்படை கப்பல் சயூராவில் பணியாற்றும் பெயர் வெளியிட விரும்பாத அதிகாரி ஒருவர் 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' நிருபரிடம் கூறுகையில்

ஜனவரி 7 ஆம் திகதி சம்பவம் புலிகளின் பலத்தை காட்டுகிறது. இந்தியாவுடன் இணைந்து செயற்பட்டால்தான் அவ்வாறான செயல்களைத் தடுக்கமுடியும் எனக் குறிப்பிட்டார்.

# பாதுகாப்பை உறுதிப்படுத்த விசேட திட்டம்

கொழும்பு—

பொதுமக்களின் பாதுகாப்பை உறுதிசெய்யக்கூடிய வகையிலான விசேட பாதுகாப்புத் திட்டம் அமுல்படுத்தப்படவுள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் பணிப்புரைக்கமைய இந்தப் பாதுகாப்புத்திட்டம் சீரான முறையில் அமுல்படுத்தப்படுமென பொலிஸ்மா அதிபர் சந்திரா பெர்னாண்டோ தெரிவித்தார்.

சகல சமூகத்தவரின் பாதுகாப்பை உறுதிசெய்வதற்காக அனைத்து படையினரும் தம்மை அர்ப்பணிப்பதுடன் மட்டும் நில்லாமல், சமாதானத்தை நிலைநாட்டுவதற்கான உதவிகளை வழங்கவும் முன்வந்துள்ளனர் எனத் தெரிவித்தார்.

# இன்றைய முதலாவது டெஸ்ட் போட்டிக்கான இந்திய அணியைத் தேர்வுசெய்வதில் சிக்கல்!

லாகூர் —

46 நாள் சுற்றுப்பயணம் மேற்கொண்டு பாகிஸ்தான் சென்றுள்ள இந்திய அணி, பாகிஸ்தானுக்கு எதிராக 3 டெஸ்ட் மற்றும் 5 ஒருநாள் போட்டி கொண்ட தொடரில் விளையாடுகின்றது.

முதலாவது டெஸ்ட் போட்டி இன்று லாகூரில் ஆரம்பமாகி 17 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இரு அணி வீரர்களும் நேற்று தீவிர வலைப் பயிற்சியில் ஈடுபட்டனர். ராவிட் தலைமையிலான இந்திய அணி தற்போது வலுவானதாகவுள்ளது. துடுப்பாட்டத்தில் சிறந்து விளங்குகின்றது. பின்கள ஆட்டக்காரர்கள் கூட பிரகாசமான ஆட்டத்தை வெளிப்படுத்து மளவிற்கு துடுப்பாட்டம் வளர்ச்சியடைந்துள்ளது.

14 வருடத்திற்கு பின்னர் கங்கூலி தலைமையில் கடந்த 2004 ஆம் ஆண்டு பாகிஸ்தான் சென்ற இந்திய அணி வரலாற்றுச் சாதனை வெற்றியுடன் திரும்பியது. ஒரு நாள் போட்டித் தொடரை 3:2 என்ற கணக்கிலும் டெஸ்ட் தொடரை 2:1 என்ற கணக்கிலும் இந்தியா கைப்பற்றியது.

இந்த நிலையில் இன்று களமிறங்கும் இந்திய அணியில் விளையாடும் வீரர்களைத் தேர்வு செய்வதில் கடுமையான குழப்பம் நிலவுகிறது. அதுவும் முக்கியமாக தொடக்க ஆட்டக்காரராக யாரைக் களமிறக்குவது என்பது தான் குழப்பத்திற்குக் காரணம்.

சேவாக்குடன் தொடக்க ஆட்டக்காரர்களாக களமிறங்குவதில் ஜாபர், கம்பீர் இடையே கடும் போட்டியிருக்கும். இதுதவிர தற்போது 6 ஆவது இடத்தில் யுவராஜ்சிங் ஆடி வருகிறார். அவர் நல்ல ஆட்டத் திறனில் உள்ளார். ராவிட், டெண்டுல்கர், சேவாக், யுவராஜ்சிங் லக்ஷ்மன், டோனி, பதான், கும்ளே ஆகியோர் அணியில் இடம் பெறுவது உறுதியானது.


விளையாட்டு

இதனால் கங்கூலிக்கு அணியில் இடம் கிடைக்குமா என்பதில் சந்தேகம் நிலவு கிறது. அவர் அணியில் இடம் பெறும் பட்சத்தில் கம்பீர், ஜாபர் இருவரும் நீக்கப்பட வேண்டிய நிலை உருவாகும். ஏனெனில், இந்தியா தலா இரு வேகப் பந்து வீச்சாளர் மற்றும் 2 சுழற் பந்து வீச்சாளர்களுடன் களமிறங்கும்.

விக்கெட் கீப்பர் டோனி தான் மிகுதி 6 பேரை தேர்வு செய்ய வேண்டும். இதில் டிராவிட், சேவாக், டெண்டுல்கர், யுவராஜ்சிங், லக்ஷ்மன், ஆகியோர் இடம் பெறுவர். மிகுதியாக ஒரு இடம்தான் உள்ளது. இந்த ஒரு இடத்திற்கு கங்கூலி,ஜாபர்,கம்பீர் ஆகியோர் போட்டி போடுகின்றனர்.

இலங்கை தொடரில் கம்பீர் சிறப்பாக ஆடவில்லை. எனவே, ஜாபருக்கு வாய்ப்புக் கிடைக்கலாம். ஜாபர் இறங்கும் வேளையில் கங்கூலிக்கு வாய்ப்புக் கிடைப்பது கடினம்.

மேலும் வேகப்பந்து வீச்சிலும் யாரைக் களமிறக்குவது என்பதிலும் சந்தேகம் ஏற்பட்டுள்ளது.



பாகிஸ்தானிலுள்ள புற்றுநோய் மருத்துவமனைக்குச் சென்ற இந்திய அணித் தலைவர் ராவிட்.

பதானுடன் ஷகீர்கான் களமிறங்குவார் என எதிர்பார்க்கப்படுகிறது. ஏனெனில் ஷகீர்கான் உள்ளூர் போட்டிகளில் சிறப்பாக ஆடி, இழந்த தனது திறனை மீண்டும் பெற்றுள்ளார். மொத்தத்தில் முதல் டெஸ்ட்டில் ஆடும் வீரர்களைத் தேர்வு செய்வதில் அணி நிர்வாகத்துக்கு தலைவலி தான்.

பாகிஸ்தான் அணி சொந்த நாட்டில் நடைபெற்ற தொடரில் ஆஷஸ் தொடரை வென்ற இங்கிலாந்து - அணியை பந்தாடியது. இன்ஸமாம் தலைமையிலான பாகிஸ்தான் அணியைப் பொறுத்த வரையில் இந்திய அணிக்கு எல்லா வகையிலும் நெருக்கடி கொடுக்கக்கூடியது.

இரு அணியும் சிறப்பானது என்பதால் இந்தத்தொடர் மிகவும் விறுவிறுப்பாக இருக்கும்.

## கடாபி மைதானத்தில் அணிகளின் சாதனைகள்!

இஸ்லாமாபாத் —

இந்திய - பாகிஸ்தான் அணிகள் இடையேயான முதல் டெஸ்ட் இன்று கடாபி மைதானத்தில் ஆரம்பமாகிறது.

இந்த மைதானத்தில் இதுவரை நடந்த போட்டிகளில் இந்தியாவுக்கு எதிராக 1989 ஆண்டு நடைபெற்ற டெஸ்ட் போட்டியில் 5 விக்கெட்டுக்களை இழந்து பாகிஸ்தான் அணி குவித்த 699 ஓட்டங்களே அதிகபட்ச ஓட்டங்களாகும்.

1981 ஆம் ஆண்டு நடைபெற்ற பாகிஸ்தானுக்கு எதி ரான டெஸ்ட்டில் இந்திய அணி அதிகபட்சமாக 509 ஓட்டங் களை இந்த மைதானத்தில் குவித்திருந்தது.

*குறைந்த பட்ச ஓட்டங்கள்:*

பாகிஸ்தானுக்கு எதிராக 2002 ஆம் ஆண்டு நடைபெற்ற டெஸ்ட்டில் நியூசிலாந்து பெற்ற 73 ஓட்டங்கள்.

*இந்தியாவின் குறைந்தபட்ச ஓட்ட எண்ணிக்கை:*

பாகிஸ்தானுக்கு எதிராக 1984 ஆம் ஆண்டு நடைபெற்ற டெஸ்ட்டில் 156 ஓட்டங்களுக்குள் இந்தியா சுருண்டமையாகும்.

*பாகிஸ்தானின் குறைந்தபட்ச ஓட்ட எண்ணிக்கை:*

நியூசிலாந்துக்கு எதிராக 1969 ஆம் ஆண்டு நடைபெற்ற டெஸ்ட்டில் 114 ஓட்டங்களுக்குள் பாகிஸ்தான் சுருண்டமையாகும்.

*வீரர்கள் குவித்த அதிக ஓட்டங்கள்:*

2002 ஆம் ஆண்டு நியூசிலாந்துக்கு எதிரான டெஸ்ட்டில் இன்ஸமாம் குவித்த 329 ஓட்டங்கள்.

*அடிக்கப்பட்ட அதிக சதங்கள்:*

பாகிஸ்தான் வீரர்கள் ஜாகீர் அப்பாஸ், மொயீன்கான் ஆகியோர் தலா 4 சதம் அடித்துள்ளனர். இந்திய வீரர்களில் முன்னாள் வீரர் அமர்நாத் 3 சதங்கள் அடித்துள்ளார்.

*வீரர்கள் வீழ்த்திய அதிக விக்கெட்டுக்கள்:*

பாகிஸ்தான் முன்னாள் வீரர் இம்ரான்கான் 17 ஆட்டங்களில் விளையாடி 56 விக்கெட்டுக்களை வீழ்த்தியுள்ளார்.

இந்திய வீரர்களில் கபில்தேவ் 5 போட்டிகளில் விளையாடி 13 விக்கெட்டுக்களைக் கைப்பற்றியுள்ளார்.

கடாபி மைதானத்தில் இதுவரை இந்தியா 6 டெஸ்ட் போட்டிகளில் விளையாடியுள்ளது. இதில் ஒரு டெஸ்ட்டில் கூட அது வெற்றி பெறவில்லை. 2 போட்டிகளில் தோல்வியடைந்துள்ளது. 4 போட்டிகளை சமன்செய்தது. இறுதியாக 2004 ஆம் ஆண்டு இந்திய அணி இந்த மைதானத்தில் விளையாடியது.

## பெயர் மாற்றம்

இல.96, கட்சன் வீதி, வட்டக்கச்சி என்னும் முகவரியில் வசிக்கும் ஞானப்பிரகாசம் றேமட் ஆகிய நான் இன்றிலிருந்து ஞானப்பிரகாசம் றேமன் எனும் பெயரில் மாற்றம் செய்துள்ளேன் என்பதை சகலருக்கும் அறியத் தருகின்றேன்.

(4437) - ஞானப்பிரகாசம் றேமன்

Direct Start After O / L .......

1 Diploma in Microsoft Office DMO 4 months
2 Diploma in Computer Programming DCP 4 months
3 Diploma in Desktop Publishing DTP 3 months
4 Diploma in Web Design DWD 4 months
5 Diploma in Computerised Accounting DCA 3 months



Registered with Ministry of Vocational Education

மாணவரின் முதன்மை தெரிவு ஏசியன் !
▶ 13 ஆண்டுகள் கணினிக் கல்விச் சேவை
▶ அனுபவமிக்க பயிற்சியாளர்கள்
▶ ஒவ்வொரு மாணவரிலும் தனிப்பட்ட கவனம்
▶ இலவச பாடப் புத்தகங்கள்
▶ Transfer Facility
▶ தவணை முறைக் கட்டணங்கள்

Free Study Packs

ICM ENGLAND Recognised Certification

புதிய பிரிவுகள் ஒவ்வொரு வாரமும் ஆரம்பம்

ASIAN COMPUTER SYSTEMS

| யாழ்ப்பாணம் | சுன்னாகம் | நெல்லியடி | சாவகச்சேரி |
|---|---|---|---|
| 2 G, ஸ்ரான்லி வீதி, Tel : 021-222 5677 | 108,K.K.S.வீதி, (Jet Motors) சுன்னாகம். Tel : 071-2501589 | கொடிகாமம் வீதி, நெல்லியடி. Tel : 077-3122198 | கண்டி வீதி, சாவகச்சேரி. Tel : 077-3039587 |

இன்பத்தமிழ் எங்கள் உயிருக்கு நேர்

மலரவிருக்கும் 14-01-2006 தைப்பொங்கல் நாளிலிருந்து
தமிழரின் தாயக மண்ணில் பிறக்கும் குழந்தைகளுக்கு தமிழ்ப்பெயர் சூட்டப்படின்


தமிழீழ வைப்பகம் அமுதம் கணக்கு

தொடங்கி வழங்கவுள்ளது. விளக்கங்களை அருகில் உள்ள
தமிழீழ வைப்பகக்கிளைகளில் பெற்றுக்கொள்ளவும்.

தமிழீழ வைப்பகம் தமிழரின் காப்பகம்



அண்மையில் நடைபெற்ற கொக்குவில் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் நூல் வெளியீட்டு விழா இறைவணக்கத்துடன் ஆரம்பமாகியபோது எடுக்கப்பட்ட படம்.



குருநகர் மவுண்கார்மேல் மாதா ஆலய இளைஞர் ஒன்றியம் நடத்திய ஒளிவிழா வைபவத்தை பங்குத்தந்தை அருட்பணி மைக்கல் சௌந்தரநாயகம் அடிகளார் மங்கள விளக்கேற்றி ஆரம்பித்துவைப்பதைப் படத்தில் காணலாம். (206)

# காரைநகர் மாணிக்கவாசகர் சபை நடத்திய சைவசமய போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம்—

காரைநகர் மாணிக்கவாசகர் சபை - மாணிக்கவாசகர் விழாவை முன்னிட்டு பாடசாலை மாணவர்களிடையே நடத்திய சைவ சமயப் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள் விபரம் வெளியிடப்பட்டுள்ளது.

இப்போட்டியில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்களின் விபரம் வருமாறு;

தரம் 2

1 ஆம் இடம் - யோ.பிரேமரூபன், சுந்தரமூர்த்தி நாயனார் வித்தியாலயம், 2ஆம்இடம், தே. சுதனிகா, கலாநிதி ஆ.தியாகராசா ம.ம.வித்தியாலயம், 3ஆம் இடம், வி.சிவப்பிரியன், கலாநிதி ஆ.தியாகராசா ம.ம.வித்தியாலயம்.

தரம் 3

1ஆம்இடம், ஏ.நேவித்தியா, வலந்தலை வடக்கு அ.மி.த.க. பாடசாலை, 2 ஆம் இடம், ந. தீபிகா, சுந்தரமூர்த்திநாயனார் வித்தியாலயம், 3ஆம் இடம், த.ஆரணி, யாழ்ற்ரன் கல்லூரி

தரம் 4

1ஆம் இடம், இ.கிரிசாந்தி, யாழ்ற்ரன் கல்லூரி, 2ஆம் இடம், பா.நிதர்சன் வலந்தலை வடக்கு அ.மி.த.க.பாடசாலை, 3 ஆம் இடம், சோ.தரண்யா மெய்கண்டான் வித்தியாலயம், நி.பிரதீபன் கலாநிதி ஆ.தியாகராசா ம.ம.வித்தியாலயம்.

தரம் : 5

1ஆம் இடம், சி.இராகுலன் கலாநிதி ஆ.தியாகராசா ம.ம. வித்தியாலயம், 2ஆம் இடம், த. பாலகுமார் வலந்தலை வடக்கு அ.மி.த.க பாடசாலை, 3ஆம் இடம், ச.சிவகாந்தன் சுந்தரமூர்த்தி நாயனார் வித்தியாலயம்.

தரம் : 6

1ஆம் இடம், கி.சிவநிரஞ்சன் கலாநிதி ஆ.தியாகராசா ம.ம. வித்தியாலயம், 2ஆம் இடம், வி. கோபிகா, கலாநிதி ஆ.தியாகராசா ம.ம.வித்தியாலயம், 3 ஆம் இடம் இ.கிரிசா, யாழ்ற்ரன் கல்லூரி.

தரம் : 7

1ஆம் இடம், ச.இராகவன் யாழ்ற்ரன் கல்லூரி, 2ஆம் இடம், ஞா.றமேஸ் யாழ்ற்ரன் கல்லூரி. 3 ஆம் இடம், க.காந்தரூபன் யாழ்ற்ரன் கல்லூரி.

தரம் : 8

1ஆம் இடம் யோ.வித்தியா, யாழ்ற்ரன் கல்லூரி, 2ஆம் இடம், ந.ஜெயகணேசன் கலாநிதி ஆ. தியாகராசா ம.ம.வித்தியாலயம், 3ஆம் இடம் வ.கஜனி யாழ்ற்ரன் கல்லூரி.

மேற்பிரிவில்

1ஆம் இடம், இ.ராஜேஸ்வரி கலாநிதி ஆ.தியாகராசா ம.ம. வித்தியாலயம், 2ஆம் இடம், வி.பாலேந்திரன் யாழ்ற்ரன் கல்லூரி, 3ஆம் இடம் க.கோகிலா யாழ்ற்ரன் கல்லூரி.

தரம் : 10

1ஆம் இடம் தி.பிரசாத், கலாநிதி ஆ.தியாகராசா ம.ம. வித்தியாலயம், 2ஆம் இடம், வே.தேவகுமாரி கலாநிதி ஆ. தியாகராசா ம.ம.வித்தியாலயம், 3ஆம் இடம், க.நாகேஸ்வரி வியாவில் சைவத் தமிழ்க் கலவன் பாடசாலை.

தரம் : 11

1ஆம் இடம், ச. சுகதா, கலாநிதி ஆ.தியாகராசா ம.ம.வித்தியாலயம், 2ஆம் இடம், சி.குமுதினி, யாழ்ற்ரன் கல்லூரி, 3ஆம் இடம், இ.பாலரஞ்சன் யாழ்ற்ரன் கல்லூரி.

தங்கப்பதக்கம் பெறுவோர்.

1. சி.ராகுலன் (தரம் 5) கலாநிதி ஆ.தியாகராசா ம.ம.வித்தியாலயம், 2.யோ.வித்தியா (தரம் 8) யாழ்ற்ரன் கல்லூரி, 3.ச.சுகதா (தரம் 11) கலாநிதி ஆ.தியாகராசா ம.ம.வித்தியாலயம்.

## யாழ்.நூலகப் பகுதியில் மக்கள் நடமாட்டம் குறைவு

யாழ்ப்பாணம்—

யாழ்.பொது நூலகத்துக்குச் செல்வதற்கு மக்கள் தயக்கம் காட்டி வருகின்றனர்.

கடந்த காலத்தில் நூலகத்தின் அனைத்து வளங்களையும் உச்சமாகப் பயன்படுத்திவந்த குடாநாட்டு மக்கள்-படையினரால் அண்மையில் முற்றவெளிப் பகுதியில் அப்பாவிப் பொதுமக்கள் சுட்டுக்கொல்லப்பட்டதையடுத்து இப்பகுதிகளில் நடமாடவே தயக்கம் காட்டி வருவதாகவும் நூலகத்தினர் தெரிவித்தனர்.

நூலக நிர்வாகத்தினரால் தற்போது நூலக வளாகத்தினுள் நுழைபவர்களிடம் பாதுகாப்பு கருதி அடையாள அட்டையும் கோரப்படுகின்றது. இந்தப் பகுதிகளில் சாரதிப் பயிற்சியில் ஈடுபடுபவர்களும் தற்போது குறைவடைந்துள்ளனர். (90)

## பொங்கல் விழா

கொக்குவில்—

யாழ்.குருநகர், மவுண்கார்மேல் மாதா தேவாலய இளைஞர் ஒன்றியத்தால் நாளை காலை 7 மணிக்கு கார்மேல் மண்டபத்தில் பொங்கல் வைபவம் சிறப்பாக நடைபெறவுள்ளது.

பங்குத்தந்தை அருட்பணி மைக்கல் சௌந்தரநாயகம் தலைமையில் பொங்கல் வைபவம் இடம்பெற்று பொங்கல் சாதம் வழங்குவதற்கு முன்பாக விசேட வழிபாடு ஒன்றும் நடத்தப்பட இருப்பதாக, இளைஞர் ஒன்றியத்தினர் தெரிவித்தனர். (206)

## குடாநாட்டில் மீண்டும் வெளிநாட்டு வியாபாரிகள்

கொக்குவில்—

வெளிநாட்டுக் கைக்கடிகார வியாபாரிகள் மீண்டும் குடாநாட்டில் பரவலாக வியாபாரத்தில் ஈடுபடுவதைக் காணக்கூடியதாக உள்ளது.

கடந்த வருட முற்பகுதியிலும் வருகைதந்த மேற்படி வியாபாரிகள் கடந்த சில மாதங்களாகக் காணப்படவில்லை. இப்பொழுது மீளவும் வருகைதந்துள்ள வெளிநாட்டு வியாபாரிகள் தம்மால் எடுத்துவரப்பட்ட கைக்கடிகார வகைகளை சிறிதளவில் கடைபரப்பிவைத்து வியாபாரத்தில் ஈடுபட்டுவருகின்றனர்.

முன்பு இவர்களால் விற்பனை செய்யப்பட்ட கைக்கடிகாரங்கள் தரத்தில் குறைந்தவை என கைக்கடிகார வியாபாரிகள் சுட்டிக்காட்டி இருந்தனர்.

ஆயினும் அவர்கள் மீண்டும் வருகைதந்து விற்பனைகளில் ஈடுபட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. (206)

## வைத்திய உபகரணங்கள் கையளிப்பு

பருத்தித்துறை—

இந்திய அரசு பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலைக்கு சுமார் 6 கோடி ரூபா பெறுமதியான வைத்திய உபகரணங்களை அன்பளிப்பாக வழங்கியுள்ளது. மேலும், பல கோடி ரூபா பெறுமதியான பொருட்களை இந்திய அரசு வழங்கவுள்ளது.

இலங்கைக்கான இந்தியத் தூதர் நிருபமா ராவ் இந்த உபகரணங்களை சுகாதார அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வாவிடம் கையளித்தார். இந்தப் பொருட்களைக் கொழும்பில் வைத்து பருத்தித்துறை மாவட்ட வைத்திய அதிகாரி கலாநிதி எஸ். கதிரவேற்பிள்ளை கையேற்றார்.

## படையினர் பாதுகாப்புப் பற்றி ஆராய்ந்தனர்

வண்ணை—

யாழ். நகரப்பகுதியில் நிலைகொண்டுள்ள 512 ஆவது பிரிகேட் படையணியினர் போதனா வைத்தியசாலை வளாகப்பகுதி ஊடாக தமக்கு பாதுகாப்பு அச்சுறுத்தல் ஏற்படுமா என்பதை நேரில் ஆராய்ந்ததாக, வைத்தியசாலை வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன.

வைத்தியசாலைக்குப் பின்புறமாகவுள்ள தமது முகாமுக்கு வைத்தியசாலை வளாகத்தில் இருந்து தாக்குதல் நடத்தப்படக்கூடிய சூழ்நிலைகள் பற்றி ஆராய்ந்ததுடன், வைத்தியசாலை நிர்வாகத்தினருடனும் இது பற்றி கலந்துரையாடியுள்ள தாக தெரிவிக்கப்பட்டது. (111)

## சோதனைக் கெடுபிடிகள்

வண்ணை—

யாழ். மற்றும் வன்னிப் பகுதிகளிலிருந்து ஓமந்தைச் சோதனைச் சாவடியூடாகப் பயணிப்போர் படையினரின் கெடுபிடிகளுக்கு ஆளாகி வருகின்றனர். சில அடையாள அட்டைகளின் இலக்கங்களை வைத்திருக்கும் படையினர், அவற்றை தேடி அடையாள அட்டைகளைச் சோதித்து வருகின்றனர்.

இளைஞர்கள், யுவதிகள் துருவித்துருவி விசாரித்துப்பதுடன் அச்சுறுத்தல்களுக்கும் உள்ளாகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. இதேவேளை, அண்மையில் பட்டதாரி யுவதிகள் இருவர் ஓமந்தை சோதனைச் சாவடியில் வைத்து படையினரால் கீழ்த்தரமாக நடத்தப்பட்டு சோதனையிடப்பட்டது தெரிந்ததே. (111)

## வீதிப் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டது

வண்ணை—

யாழ். பொலிஸ் நிலையத்துக்குச் செல்லும் அனைத்து வீதிகளும் மூடப்பட்டுப் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டுள்ளது. வேம்படி வீதி வழியாகவே ஒற்றையடி பாதை விடப்பட்டு பொதுமக்கள் சென்றுவர அனுமதிக்கப்படுகிறது.

கோப்பாய் பொலிஸ் நிலையத்தின் மீது அண்மையில் மேற்கொள்ளப்பட்ட கைக்குண்டுத் தாக்குதலையடுத்தே பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாக, பொலிஸ் நிலைய வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை, பொலிஸாரால் புதிய காவலரண்களும் அந்தப் பகுதியில் அமைக்கப்பட்டுள்ளதைக் காணமுடிகின்றது. (111)

## வன்னியில் வீடு தயார்ப்படுத்தும் குடாநாட்டு மக்கள்

யாழ்ப்பாணம்—

குடாநாட்டில் ஏற்பட்டுள்ள இராணுவ கெடுபிடிகளால் யாழ்.மாவட்டத்தில் பலரும் வன்னிப் பகுதிக்கு இடம்பெயர்ந்துள்ள நிலையில், இன்னும் பல குடும்பங்கள் வன்னிப்பகுதிக்குச் சென்று தங்கள் குடும்பங்களுக்கு எந்நேரத்திலும் உதவக்கூடிய வகையில் வீடுகளை தயார்படுத்திவருகின்றனர்.

ஏற்கனவே, வன்னியில் குடியிருக்கும் உறவினர்களிடம் வீடுகளை ஒதுக்கித் தயார் நிலையில் வைத்திருக்குமாறும் யாழ்ப்பாணத்தில் இருந்து எப்போதும் இராணுவ கட்டுப்பாடற்ற பகுதிகளுக்கு தாங்கள் வரக்கூடும் எனவும் அறிவித்துவருவதாகத் தெரியவருகிறது. (90)

இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

அகவை இரண்டு



பெயர் : பா.பாருசன்
முகவரி : புலோலி




## பண்டத்தரிப்பு - மாகியப்பிட்டி ஆலயங்களை உடைத்து திருட்டு!

பண்டத்தரிப்பு—

பண்டத்தரிப்பு மாகியப்பிட்டி பகுதிகளில் உள்ள ஆலயங்கள் இனந்தெரியாதோரால் உடைக்கப்பட்டுள்ளன.

கடந்தவாரம் நள்ளிரவில் பண்டத்தரிப்பு புனித பத்திமா ஆலயத்தின் ஆலயக் கதவுகள் உடைக்கப்பட்டதுடன், நற்கருணைப் பாத்திரங்கள் வெளியே போடப்பட்டிருந்தன. இதே தினத் தில் மாகியப்பிட்டி புனித செபஸ்தியார் ஆலய பிரதான கதவுப் பூட்டை உடைத்து அங்கு வைக்கப்பட்டிருந்த காணிக்கைப் பணம் திருடப்பட்டது.

இந்த ஆலயத்துக்கு அருகில் உள்ள அம்மன் கோயில் விக்கிரகங்கள் உடைக்கப்பட்டு வெளியே வீதியில் போடப்பட்டிருந்தன. இந்தச் சம்பவம் இடம்பெற்றபோது அந்தப்பகுதி எங்கும் நாய்கள் குரைத்த சத்தம் கேட்டதாகவும், பயத்தினால் வெளியே வந்து பார்க்கமுடியாது இருந்ததாக அந்தப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

இதேவேளையில், அந்தப் பகுதியில் இராணுவத்தினரின் ரோந்து நடவடிக்கைகள் இடம்பெறுவதாக அந்தப்பகுதி மக்கள் தெரி வித்தனர்.

## கரவெட்டி அத்துளு குடிநீர் சுத்திகரிப்புக்கு 65 மில்லியன் ரூபா செலவில் இயந்திரம்

கரவெட்டி—

கரவெட்டி அத்துளு குடிநீரை சுத்திகரிக்க 65 மில்லியன் ரூபா செலவில் சுத்திகரிப்பு இயந்திரம் ஒன்றை குவைத் அரசு வழங்கியுள்ளது.

தேசத்தைக் கட்டியெழுப்புவதற்கும் அபிவிருத்திக்குமான அமைச்சினால் மேற்படி இயந்திரத்தை கரவெட்டி அத்துளு குடிநீர் தாங்கி அமைந்துள்ள இடத்தில் அமைப்பதற்கான முயற்சிகள் முழுமூச்சில் இடம்பெற்றுவருவதாக கரவெட்டி அரசினர் வைத்தியசாலை அபிவிருத்தி குழுவின் தலைவர் உபாலி பொன்னம்பலம் தெரிவித்தார்.

அந்தப் பகுதியிலுள்ள சிவபாக்கியம் நடராசாவிடமிருந்து 18 குழி காணி அன்பளிப்பாகப் பெற்று மேற்படி பணிக்காக வழங்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே, நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபைக்கு சொந்தமான நிலத்தையும் சேர்த்து பெரிய தோர் தளம் அமைக்கப்பட்டு சுத்திகரிப்பு இயந்திரம் பொருத்தப்படுகிறது.

இந்த இயந்திரமானது மணிக்கு 30 ஆயிரம் லீற்றர் நீரைச் சுத்திகரித்து வழங்குமெனவும், இதன் மூலம் கரவெட்டி பிரதேசத்தில் 1000 குடும்பங்களுக்கு சுத்தமான குடிநீரை வழங்க முடியுமெனவும் தெரிவிக்கப்படுகிறது. (12)






# பெண்ணுரிமை இயக்கங்களின் செயற்பாடுகள் அனைத்தும் வெற்றி அளித்துள்ளனவா?

பெண்ணியக்குரல்கள் கடந்த நூற்றாண்டின் பிற்பகுதியில் ஓங்கி ஒலிக்க ஆரம்பித்த பின்னர் நவீன பெண்ணின் வாழ்நிலையில் திருப்திகரமான திருப்பங்கள் எந்தளவுக்கு ஏற்பட்டுள்ளன என்பது பற்றி மதிப்பீடு இன்றைய காலத்தின் தேவையாகும்.

பெண்ணுரிமைச் சட்டங்களும், பெண்ணிய இயக்கங்களும் ஜனனித்த பின்னர் பெண்களின் தற்போதைய நிலை ஓரளவுக்கு மேம்பட ஆரம்பித்துள்ளமை தெம்பூட்டுகின்ற போதிலும், பெண்களின் குறைகள் பலவும் இன்னமும் தீர்க்கப்படாத நிலை இருந்து வருகிறது. சர்வதேச அளவில் பெண்களின் வாழ்க்கைத் தரம், கல்வி, வேலைவாய்ப்பு, பொருளாதாரமேம்பாடு, அங்கீகாரம் என்பன பெண்ணியச் சிந்தனையாளர்களின் விடுதலை முன்னெடுப்புகளால் உயர்வடைந்துள்ளமை உண்மைதான்.

எனினும், குடும்பத்தில் பெண்ணின் நிலையும் சமூக-பொருளாதார-அரசியல் நிலைப்பாடுகளும் உள்ளன. பெண்ணிலைவாதிகள் தொலைநோக்குடன் தமது நடவடிக்கைகளை திட்டமிடாமல் போனதில் சில எதிர்மறையான விளைவுகளும் ஏற்பட்டிருக்கின்றன.

நவீன பெண் விடுதலை தொடர்பான பண்புகள், விழிப்புணர்வுகள் புரிதல்கள் அறிதிறன்கள் ஆய்வுகள் என்பனவற்றில் இத்துறையிலான அறிவூட்டல் பரம்பலான அளவுக்கு பெண்ணிலைவாதிகள் எதிர்பார்த்த மாதிரியான சமூக மட்டத்திலான பெண்கள் பற்றிய மனோபாவத்திலும், நடத்தையிலும், சிந்தனையிலும் வியத்தகு பெருமாற்றங்கள் ஏற்படவில்லை. ஏற்படுத்த முடியவில்லை. அதாவது சமூகத்தில் பெண் விடுதலை தேவை பற்றிய விழிப்புணர்வும் இதன் விளைதிறனான பண்பு மாற்றமும் சமூகச் சிந்தனையில் மாற்று மனப்பான்மையும் உருவாகவில்லை எனலாம்.

பெண்கள் இன்னமும் வெறும் குடும்பத்தலைவிகள்' என்ற மகுடம் சூட்டப்பட்ட போலித் தகுதிக்குள் மட்டுமே குறுங்கி போயிருக்கும் சுருக்க நிலையில் ஏற்படும் தளர்வுகள் மெத்தனமாகவே நிகழ்கின்றன.

பெண்ணியச் சிந்தனைகள் இளம் பெண்கள் மத்தியில் வினைத்திறனுடன் விதைத்து, விளைதிறனுடன் அறுவடை செய்தளவுக்கு சமூக மட்டத்தில் ஆணாதிக்கத்துக்கு அப்பாற்பட்ட இருபாலரின் மத்தியிலும் விதைப்பதில் தேக்கமும், அறுவடையில் பூச்சியமும் என்ற நிலையையே தரிசிக்க முடிகின்றது.

பெண்ணியம் பற்றிய புரிதல், புரியவைத்தல் என்பன இன்று நேற்று முன்னெடுக்கப்பட்ட விடயமல்ல. கடந்த இரு நூற்றாண்டுகளாக கூட்டம் கூட்டமாக காலம் காலமாகத் தொடர்ந்து வரும் முன்னெடுப்பு ஆகும். எனினும், இன்று வரை பெண் விடுதலை என்பது முழுமையாக மானுட சமூதாயத்துக்குப் புரிய வைக்கப்பட்ட பிரச்சினையாகவோ புரிய வைக்கப்படக்கூடிய பிரச்சினையாகவோ கருத முடியாமலிருக்கிறது. இதற்கான காரணம் அறியப்பட வேண்டும்.

புரிதல் என்ற பிரச்சினையே ஒன்றை அறிதலில் தொடர்பாகவே ஏற்படுகிறது. அறிதலில் அக்கறையுள்ளவனே புரிதலில் ஊக்கம் கொள்கின்றான். இங்கு மரபு ரீதியாகவும், வளர்ப்பு ரீதியாகவும் தீர்க்கமாக ஆணாதிக்க சிந்தனையில் ஊழிய சமூகம் மாற்றுக் கருத்துக்களை செவிமடுக்கவோ, உள்வாங்கவோ தயாராக இல்லை என்ற கருத்து நிலைப்பாடு பெண்ணியத்திற்கும் சாலப்பொருந்தும். இதுவே பெண்ணியச் சிந்தனை எழுச்சியின் ஆர்முடுகலுக்கு ஆப்புவைக்கிறது.

இன்னொரு புறம் நோக்குவதானால் நெல்லுக்கு இறைத்த நீரில் புல்லு செழித்து வளர்ந்து நெல்லையே அழித்தது போல் பெண்ணியத்திற்கும் எதிர்வினையான அம்சங்களும் தலை தூக்கியுள்ளமை தெரிகிறது. இதனால் சில முன்னெடுப்புகளினால் எழுச்சி ஏற்படுவதற்குப்பதில் வீழ்ச்சியும் ஏற்பட்டுள்ளது. இந்த எதிர்நிலை உருவாக்கத்திற்கும் சில பெண்ணிலைவாதிகளே காரணமாகிவிடுகின்றனர்.

பெண்கள் தமக்கு இழைக்கப்படுகின்ற அநீதிகள் குறைந்து உரிய அந்தஸ்தும், அங்கீகாரமும் மரியாதையும் கிடைக்க வேண்டும் என்று போராடுவதற்குப் பதிலாக ஆண்களுக்கு இருக்கின்ற மாதிரியே எல்லாவகைச் சுதந்திரமும் ஒப்பீட்டளவிலான சமத்துவமும் அடைவதுதான் பெண் விடுதலை என்ற மாதிரியான அர்த்தம் பொதிந்த தவறான கருத்தை வலியுறுத்த முற்பட்டமைதான் இந்த வீழ்ச்சிப் பாதைக்கும், எதிர்வினை விளைவுகளுக்கும் அடிகோலியதாகச் சிலர் கருதுகிறார்கள்.

ஒரு பெண்ணுக்கும் ஓர் ஆணுக்குமிடையில் என்ன ஆளுமை வேறுபாடு வேண்டிக் கிடக்கிறது? ஓர் ஆணைப்போல் எல்லவற்றிலும் சரிநிகராக நிற்கப் பெண்ணும் சளைத்தவளல்ல என்ற ஒப்பீட்டு வாதமே தப்பிதமான ஒன்று. ஆண்களோடு சமத்துவம் பெண்ணுரிமை என்று ஏட்டிக்குப் போட்டியாகப் போராடுவது தவறு.

பெண்விடுதலைக்கான மார்க்கம் ஆண்களோடு போட்டிப் போடுதல், எதிர்த்து நிற்றல் என்பவையல்ல. பெண்களுக்குரிய உரிமைகள் அவர்களுக்கு வெளியே இல்லை. அவர்களிடம் தான் இருக்கின்றது. தமது சுயத்திலுள்ள தமக்கு உயர்வைத் தரக்கூடிய உரிமைகளையும், உத்தமங்களையும் அவர்கள் வளர்த்துக் கொண்டாலே தமது உரிமைகளைப் பெறுவதில் வெற்றி கண்டு விடுவார்கள். அதைவிடுத்து ஆண்களைக் குற்றவாளிக் கூண்டில் நிறுத்தி அவர்களோடு போட்டி போட்டு சம அந்தஸ்து கோரி உரிமைப் போராட்டம் நடத்தும் நவயுகப் பெண்களின் செயற்பாடுகளினால் சமூகத்தில் பலவித பிரச்சினைகள் உருவாகி குடும்பம் என்ற அலகுகூட ஈடாட்டம் காண்கிறது. (தொடரும்...)

## ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு அர்த்தம் இருக்கு...!



மண்சட்டியில் மீன் கறி சமைத்தால் சுவையாகத்தானிருக்கும்..!' என்று வீட்டில் பெரியவர்கள் ரசித்து ருசித்துக் சொல்லக்கேட்டிருப்போம். அந்தக் காலத்தில் எல்லாமே மண்சட்டி மயம்தான்! மண் சட்டியில் சமைப்பது ருசிக்காக மட்டுமல்ல... அவற்றில் பிரத்தியேக சத்துக்களும் கிடைக்கின்றன. இன்று குழந்தையில்லாத தம்பதி மற்றும் நீரிழிவு நோயாளிகளுக்குக் கூட டொக்டர்கள் இதைத்தான் எடுத்துரைக்கிறார்கள்.



'சாப்பிட உட்கார்ந்தால் யாரோடும் வாய் பேசாதே!' என்பார்கள் நம் வீட்டுப் பெரியவர்கள். புத்தகம் படித்துக் கொண்டோ, தொலைக்காட்சி பார்த்துக்கொண்டோ சாப்பிடும்போது கவனம் சிதறுவதால் உணவின் முழு ருசி தெரிவதில்லை. பல சமயங்களில் நாம் அளவு தெரியாமலும் சாப்பிட நேர்ந்து விடுவதால், நம்மையறியாமல் உடல் பருமனாகி பல நோய்கள் நம்மைத்தாக்கும்.



வாரத்துக்கு ஒரு முறையாவது தலையில் நல்லெண்ணெய் தேய்த்து முழுகிக் குளிக்க வேண்டும் என்பார்கள் பெரியவர்கள். நம்முடைய உடல் சூடு தணிந்து உடல் சாதாரணமாகத் இந்த இயற்கை வைத்தியம். தவிர எண்ணெய் தேய்க்கும் போது கிடைக்கும் மசாஜ், அந்தந்த வாரத்தின் உடல் அலுப்பைப் போக்கும்!



அதிகாலையில் எழுந்து வாசலில் மஞ்சள் தெளித்துக் கோலமிட வேண்டும்... நிலை வாசலில் மஞ்சள் தேய்த்து பொட்டிட வேண்டும் என்பார்கள். மஞ்சள் - கிருமி நாசினி. விட்டின் நிலைப்படி வழியாக உள்ளே நுழைய எத்தனிக்கும் கிருமிகளை அங்கேயே அழித்து நம்மைப் பாதுகாப்பு வளையத்தக்குள் வைக்கும்! கோலமிடுவது நமக்கு அதிகாலை சுத்தமான காற்றையும், 'நல்ல உடல் ஆரோக்கியத்தையும்' தரும்.




சமையலுக்குப் பயன்படுத்திய பாத்திரங்களை அவ்வப்போதே கழுவி சுத்தப்படுத்தி வைத்துவிட வேண்டும் என்று வீட்டுப் பெரியவர்கள் வலியுறுத்துவதுண்டு! காரணம், உணவுத் துணுக்குகளோடு இதை மறுநாள் காலை வரை தண்ணீரில் போட்டு வைத்தால் பாத்திரத்தின் ஈரத்தில் கிருமிகள் பல்கிப் பெருகி நம்மை பலவித நோய்கள் தாக்க வழி வகுத்துவிடும். பிறகு தேய்த்தாலும் முழுசாகப் போகாது!.. ஆகவே... தான்.



வீட்டில் துளசி மாடம் வைத்து வணங்குவதற்கு ஆன்மீகக் காரணங்கள் உண்டு. இதோ சில மருத்துவ காரணங்கள்... துளசியில் பல மருத்துவ விசேஷங்கள் அடங்கியுள்ளதால் தான் அந்தக் காலத்தில் வீட்டுக்குள்ளேயே துளசியை வைத்து வளர்க்க வேண்டும் என்றார்கள். துளசி வளர்ந்தால் கொசு வராது என்பதும் ஒரு நவீன கண்டுபிடிப்பு!

# குழந்தைகள் தவறு செய்தால் அடித்துத் திருத்தலாமா?

குழந்தைகள் தவறு செய்யும் போது அவர்களை அடிக்காமல் கையாள்வது எப்படி? அப்படியே குழந்தைகளை அடிப்பதால், அந்தக் குழந்தைகளின் மனநிலையில் என்ன மாதிரியான மாற்றங்கள் ஏற்படும்? பெற்றோர்களின் எந்த மனநிலை குழந்தைகளை அப்படி அடிக்கத் தூண்டுகிறது? இது போன்ற கேள்விகளுக்கு உளவியல் ரீதியான விளக்கம் தருகிறார் உளவியல் நிபுணர்.



பொதுவாக எந்தப் பெற்றோருக்கும் தன் குழந்தைகளை அடிக்க(திட்ட) வேண்டும் என்று ஆசை இருக்காது. குழந்தைகள் தவறு செய்யும் போது, அவர்களிடம் நல்லவிதமாகப் பேசி தவறைத் திருத்த வேண்டும் என்று தான் பார்ப்பார்கள். ஆனாலும், தங்களையறியாமல் குழந்தைகளை அடிக்கத்தானே செய்கிறார்கள்... ஏன் இப்படி நடக்கிறது? இதற்கு நிறைய காரணங்களைச் சொல்ல முடியும்.

கணவன், மனைவிக்கிடையே பிரச்சினை இருந்தாலோ, மாமியார்-மருமகள் அல்லது வேறு குடும்ப உறவுகளுடன் பிரச்சினை இருந்தாலோ பெற்றோர்கள், அந்தக் கோபத்தையெல்லாம் குழந்தைகள் மீது காட்ட ஆரம்பிக்கிறார்கள்.

காலை நேரத்தில் அவசர அவசரமாக அலுவலகம் கிளம்பிக் கொண்டிருக்கும் போதோ அல்லது வேறு முக்கியமான வேலைகளில் இருக்கும் போதோ பெற்றோர்கள் குழந்தைகள் ஒரு சின்ன தவறு செய்தால் கூட, அதைப் பெரிதாக்கி அவர்களுடைய முழுக் கோபத்தையும் குழந்தைகள் மீது காட்ட ஆரம்பித்து விடுவார்கள்.

பாடசாலை செல்லும் குழந்தைகளை அதன் வேகத்துக்கு ஏற்றபடி நிதானமாக சாப்பிட வைத்து, பாடசாலைக்கு அனுப்ப குறைந்தது அரைமணி நேரமாவது ஆகும். அதையே அடித்து சாப்பிட வைத்தால் ஐந்து நிமிடம் தான் ஆகும் என்று சில பெற்றோர்கள் நினைப்பதுண்டு. குழந்தைகளை பெற்றோர் அடிப்பதற்கு இது போன்ற நிறைய காரணங்களைச் சொல்லலாம்.

ஏழு அல்லது எட்டு வயது வரை தான் குழந்தைகள் இப்படித்தன் பெற்றோர்கள் அடிப்பதைச் சகித்துக் கொள்வார்கள். அதற்குப் பிறகு மெதுவாக எதிர்த்துப் பேச ஆரம்பிக்கும். என்னுடைய அனுபவத்தில் பெற்றோர்களை அடிக்கக் கையோங்கும் சில விடலைப் பருவத்தினரைப் பார்த்திருக்கிறேன்! ஒரு வகையில் குழந்தைகளிடம் முரட்டுத்தன்மை வளர நாமே காரணமாகி விடுகின்றோம்.

குழந்தைகள் பெரியவர்களாக வளர, வளர நம்மையறியாமல் நாம் அவர்களுடைய ஈகோவைத் தூண்டி விடுகிறோம். அவர்களின் அந்த ஈகோ காரணமாகத் தான் அவர்கள் வளர்ந்த நிலையில் பெற்றோர்களை அடிக்கவும் செய்கிறார்கள்.

இன்றைக்கு பல வீடுகளில் இள வயதினர் பெற்றோர்களை முரட்டுத்தனமாக எதிர்த்துப் பேசுவது சர்வ சாதாரணமாகி விட்டது. இதற்கெல்லாம் முதல் காரணம் அடிப்பதுதான். சாதாரணமாகச் சொல்லப்போனால் அவர்கள் வாங்கியதை திருப்பிக் கொடுக்கிறார்கள் அவ்வளவுதான்.

காலம் காலமாக நாம், ஒரு எழுதப் படாத சட்டத்தை பின்பற்றி வருகிறோம். நான் சின்ன வயதில் ஒரு பொய் சொன்னேன்... என் அப்பா என் கன்னத்தில் விட்டார் ஒரு அறை! அன்றிலிருந்து பொய் சொல்வதையே விட்டேன்!.. என்று ஒரு தாயோ தந்தையோ தன் பெற்றோர்கள் தனக்குச் செய்ததையே, தங்கள் குழந்தைகளுக்கும் செய்ய ஆரம்பிக்கிறார்கள். ஆனால், எல்லோரும் ஒரே மாதிரியான மனோபாவத்துடனா இருப்பார்கள்? சரி... நான் தவறு செய்தது தெரிந்தால் தானே அம்மா திட்டுவார்கள். அடிப்பார்கள்... இனி நான் அவர்களுக்குத் தெரியாமல் எதையும் செய்து விடுகிறேன்..என்று குழந்தைகள் நினைத்து விட்டால் என்ன செய்வது?

சிறுவயதில் இப்படி அடித்து, அடக்கி, அதிகார அணுகுமுறை கொண்டு வளர்க்கப்படும் குழந்தைகள் வளர்ந்த நிலையில் இந்த குணாதிசயங்களுடன் தான் இருப்பார்கள்...

இப்படி பயந்து, பயந்து வளர்வதால், சிலர் வளர்ந்த பின்பு தன்னம்பிக்கை இல்லாமல், சுதந்திரமாகச் சிந்திக்கவோ, செயற்படவோ தெரியாமல் போவதும் உண்டு.


வாழ்க்கையில் ஏதாவது சாதிக்க வேண்டும் என்ற சுயமான வேகம் இல்லாமல், மற்றவர்கள் ஊக்குவித்தால் மட்டுமே செயல்படுவார்கள்.

மற்றவர்களோடு ஒத்துப் போக முடியாமல், தங்கள் நல்ல உறவுகளை இவர்கள் கெடுத்துக் கொள்ளலாம்.

முரட்டுத்தனமான பெற்றோர்களால் வளர்க்கப்படும் குழந்தைகள், அவர்களைப் போலவே முரட்டுத்தனமான சுபாவத்துடன் வளரவும் வாய்ப்பிருக்கிறது.

எனவே தான், குழந்தைகளை மிக மிகக் கவனமாக வளர்க்க வேண்டும் என்று சொல்கின்றோம்.

குழந்தைகளின் மனசு பூப்போன்றது. அதை அடித்துக் காயப்படுத்தி, கசக்கி எறிந்து விடக்கூடாது. மனோதத்துவ நிபுணர்களைப் பொறுத்தவரையில் குழந்தைகளை அடிப்பது என்பது மிகவும் தவறான செயலாகத்தான் கருதுகிறார்கள்.



குழந்தைகள் எதையும் சரியாகப் பார்ப்பார்கள். ஆனால், தவறாகப் புரிந்து கொள்வார்கள். அப்பா, அம்மா என்னை அடிக்கிறார்கள். என்னை அவர்களுக்குப் பிடிக்கவில்லை என்று தவறான கணிப்புக்கு வந்துவிடுவார்கள்.

ஒரு குழந்தைக்கு அம்மாவும் சரி, அப்பாவும் சரி வாழ்க்கையில் மிகவும் முக்கியமானவர்கள். அவர்களே தனக்கு இல்லையென்ற எண்ணம் வரும் போது அந்தக் குழந்தை மனதளவில் பாதிக்கப்பட நிறையவே வாய்ப்பிருக்கிறது. அதற்காக குழந்தைகளை ஒரேயடியாகச் செல்லம் கொடுத்து வளர்க்கவும் கூடாது... அடித்து உதைத்து அடிமையாக வளர்க்கவும் கூடாது. நண்பர்கள் போன்ற அணுகு முறையே சிறந்தது.


இரண்டு பேரையும் அடித்துக் கண்டித்துத்தான் வளர்த்தேன். ஒருத்தன் நல்லவனாக இருக்கிறான். இன்னொருத்தன் கெட்டுக் குட்டிச்சுவாராய்ப் போய்விட்டான் என்று சில பெற்றோர்கள் அடிக்கடி புலம்புவதைக் கேட்டிருப்பீர்கள்.

சில குழந்தைகள் இயல்பிலேயே மனப்பக்குவத்துடனும், சுய மதிப்புடனும் இருப்பார்கள். இவர்கள் கீழே விழுந்தால், இறப்பர் பந்து மாதிரி விழுந்தவேகத்தில் இன்னும் அதிகமான விசையுடன் மேலே எழும்பி விடுவார்கள். அதாவது 'எனக்கு வாய்த்தது முரட்டு அப்பா... அவர் குணத்தை மாற்ற முடியாது அதனால் அவர் அடிப்பதையோ கடிந்துகொள்வதையோ பெரிதுபடுத்தக்கூடாது' என்று தந்தையின் செயல்கள் தன்னைப் பாதிக்காதபடி விட்டுவிடுவார்கள். பிற்காலத்தில் இந்த மாதிரியான குழந்தைகள் நல்ல படியாகவே வளர்ந்து நிற்பார்கள்.

இன்னொரு வகை குழந்தைகளுக்கு மனப் பக்குவமும், சுயமதிப்பும் குறைவாகவே இருக்கும். இந்தக் குழந்தைகளுக்கு பெற்றோருடைய சிறு சிறு தவறுகள் கூட மனதளவில் பெரிய பாதிப்புகளை ஏற்படுத்தும். இவர்கள் விடயத்தில் தான் பெற்றோருடைய அணுகுமுறை மிகச் சரியாகப் பக்குவமாக இருக்க வேண்டும் என்கிறார்கள் குழந்தை உளவியல் நிபுணர்.

எந்தக் குழந்தை எப்போது மாறும் என்று சொல்ல முடியாது. குழந்தை எந்த விடயத்தையும், பெற்றோர்களிடமிருந்தே கற்றுக் கொள்கிறது. அதனால் பெற்றோர்கள் தான் கவனமாக அவர்களைக் கையாள வேண்டும்.

# நெஞ்சுவலியை அலட்சியப்படுத்தாதீர்கள்



சிலருக்கு திடீரென்று நெஞ்சு வலி ஏற்படுகின்றது. வேலை செய்யும் போது, பாரங்களை தூக்கும் போது ,வேகமாக நடக்கும் போது, உணவு உண்ட பின்பு இப்படி அடிக்கடி வலி தோன்றும். அநேகம் பேர் இதை வாயுத்தொல்லை என்று அவர்களாகவே ஏதோ காரணங்களைக் கூறி அலட்சியம் செய்து விடுகின்றனர்.

பொதுவாக மார்பு வலி, மாரடைப்பு ஏற்பட பல காரணங்கள் உள்ளன. குறிப்பாக இருதயம் இயங்குவதற்கு பிராணவாயு தேவை. கரோனரி என்ற ரத்தக் குழாய் இருதயத்திற்கு ரத்தத்தையும், பிராணவாயுவையும் கொடுக்கிறது. இந்த நிலையில் இதயத்துக்கு தேவையான அளவு பிராணவாயு கிடைக்கவில்லை எனில் நெஞ்சுவலி ஏற்படும். அதே நேரத்தில் ரத்தக்குழாய் உள் சுவர்களில் அசுத்தக் கொழுப்பு முழுமையாக அடைத்தாலும் மாரடைப்பு வரும். இந்தப் பிரச்சினை தற்காலத்தில் 20 வயது தொடக்கம் 70 வயதுள்ளவர்களுக்கு வருகிறது.

மார்புவலி,மாரடைப்புக்குக் காரணமான கரோனரி இரத்தக் குழாயின் அடைப்பைக் கண்டறிய பல பரிசோதனைகள் உள்ளன. இதில் மிகவும் முக்கியமான பரிசோதனை கரோனரி ஆஞ்சியோகிராம் என்ற உள்ஆராய்வு பரிசோதனை. இந்தப் பரிசோதனைதான் எல்லா மார்பு வலி மாரடைப்பையும் கண்டறிய உதவுகின்றது.

இந்தப் பரிசோதனையில் எந்தக் குழாயில் எவ்வளவு அடைப்பு என்ற விபரங்கள் தெரிந்து விடும். இரத்தக் குழாயில் ஓர் அடைப்பா? அல்லது மூன்றா, நான்கா,என்ற விபரங்கள் தெரிந்த பின்பு தான் பைபாஸ் அறுவை சிகிச்சையா? அல்லது பலூன் ஸ்டெண்ட் மூலம் அடைப்பை நீக்கலாமா என்ற முடிவுக்கு வரமுடியும்.

ஒன்றிரண்டு அடைப்பு இருந்து இளைஞராக இருந்தால் சத்திர சிகிச்சையைத் தவிர்த்து பலூன் ஸ்டெண்ட் மூலம் இந்த அடைப்பை நீக்கி விடலாம்.

இந்தச் சிகிச்சை முறையில் பலூனின் மேல் போல் பொயின்ற் பென்சில், ஸ்பிரிங் போன்ற ஸ்டெண்டை வைத்து இதை கரோனரி இரத்தக் குழாயின் உள்ளே செலுத்த வேண்டும். பிறகு அடைப்பு உள்ள பகுதியில் இந்த ஸ்டெண்டை பொருத்தி விட்டு பலூனை வெளியே எடுத்து விட வேண்டும். இதுதான் பலூன் ஸ்டெண்ட் சிகிச்சை எனப்படுவது. இந்தச் சிகிச்சை தற்போது இந்தியாவில் விலைஉயர்வாகக் காணப்பட்டாலும் இன்று பரவலாக உபயோகிக்கப்படுகிறது. மேலும் தற்போது இந்தச் சிகிச்சை முறையில் பல அரிய மாற்றங்களும் வந்துள்ளன.

நெஞ்சு வலியை அலட்சியப் படுத்தாமல் ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்தால், பல நோய்களை மருந்து, மாத்திரைகள் மூலமே கட்டுக்குள் கொண்டு வரமுடியும்.

# மகிழ்ச்சியாக இருக்க!

நீங்கள் விரும்பினாலும், விரும்பாவிட்டாலும் உடல் என்பது உங்களுக்குத்தான் சொந்தம். அதை எந்தளவுக்கு அக்கறை எடுத்து பராமரிக்கின்றோமோ அந்தளவுக்கு அது ஆரோக்கியமாக பொலிவுடன் உங்களைப் பாதுகாக்கும்.



அழகு என்பது ஐஸ்வர்யா ராய் அல்ல. ஆரோக்கியமான சுறுசுறுப்பான உடம்பே இந்த அழகைப் பெறுவதற்கான மந்திரச்சொல் உடற்பயிற்சி தான். அதிலும் அதைச் செய்ய ஆரம்பிக்க சரியான வயது இதுவே. அடுத்த இரண்டு மாதங்களில் கண்ணாடியில் உங்களைப் பாருங்கள். ஒளிந்திருந்த உங்கள் அழகு எப்படி சுடர் விடுகிறது என்று.

ஆழ்ந்து மூச்சுவிடுங்கள். அந்த அற்புதமான அனுபவத்தைப் பெறுங்கள். அது உங்கள் வாழ்நாளையே அதிகரித்துக் கொடுக்கும். ஒரு மேகம் போல் மேலே உட்கார்ந்திருக்கும். உங்கள் மூச்சுக் காற்றை அப்படியே ஆழ்ந்து இழுத்து உங்கள் இதயத்துக்குக் கொண்டு வருவது போலவும் பிறகு அதை மெதுவாக மீண்டும் வேகமாய் அனுப்புவது போலவும் சுகமான ஒரு கற்கனை செய்தபடி மூச்சை இழுத்து விட்டால் அலுப்புத்தட்டாது.

யோகாசனம் கற்றுக் கொள்ளுங்கள். காரணம் அது உடலை மட்டுமல்ல... மனதுக்குமான நல்ல பயிற்சி தந்து அமைதிப் படுத்துகிறது.

# ஊடவியலாளர் லோகீசன் எழுதிய 'அலையின் வடுக்கள்'- அறிமுகவிழா






கிளிநொச்சி

ஈழநாதம் செய்தியாளர் லோகீசன் எழுதிய 'அலையின் வடுக்கள்' என்ற சுனாமி அனர்த்தம் தொடர்பான நூல் அறிமுகவிழா கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில் நேற்றுமுன்தினம் பிற்பகல் 3.30 மணிக்கு நடைபெற்றது.

நீடோ நிறுவனப் பணிப்பாளர் ராணி மைந்தன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், நூலின் முதற்பிரதியை தமிழீழ கடற்படையின் சிறப்புத் தளபதி கேணல் சூசை அறிமுகம் செய்து வைக்க, தமிழீழத் தேசியத் தொலைக்காட்சியின் பிரதம செய்தி ஆசிரியர் கருணாகரன் பெற்றுக்கொண்டார்.

நூலின் மதிப்பீட்டுரையை விடுதலைப் புலிகளின் முக்கிய உறுப்பினர் க.வே.பாலகுமாரன் நிகழ்த்தினார். இந்த நிகழ்வின் சிறப்புரையை கேணல் சூசை நிகழ்த்தினார்.

# தமிழீழ நீதிமன்றம் பளையில் திறப்பு!

பளை

யாழ்.மாவட்டத்துக்கான தமிழீழ நீதிமன்றம் பளைப் பிரதேசத்தில் நேற்றுக் காலை 10 மணிக்குத் திறந்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வின் பொதுச் சுடரை மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன். தியாகம் ஏற்றி வைத்தார். தமிழீழத் தேசியக் கொடியை தமிழீழ காவல்துறை நிர்வாகப் பொறுப்பாளர் கானகன் ஏற்றிவைத்தார்.

மங்கள விளக்கை சர்வதேச தமிழீழ மாணவர் பேரவைப் பொறுப்பாளர் கண்ணன், தமிழீழ விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் கி.பாப்பா ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

பெயர்ப் பலகையை கிளிநொச்சி மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் தமிழ்வாணன் திரை நீக்கம் செய்து வைத்தார்.

நீதிமன்ற கட்டடத்தை யாழ். மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி நாடாவை வெட்டித் திறந்து வைத்தார்.

இந்த நிகழ்வின் தலைமையுரையை நீதி, நிர்வாக பொறுப்பாளர் பரா நிகழ்த்தினார்.

யாழ். மாவட்டத்துக்கான குடியியல் சம்பந்தமான வழக்குகளை இந்த நீதிமன்றத்தில் இன்று முதல் தாக்கல் செய்யலாம்.

## இடம்பெயர்ந்த மக்களுக்கு அத்தியாவசியப் பொருட்கள்

அக்கராயன்

யாழ்குடாநாட்டில்தொடர்ச்சியாக இடம்பெற்றுவரும் இராணுவ கெடுபிடிகளால் நூற்றுக்கணக்கான மக்கள் வன்னிப் பிரதேசம் நோக்கி இடம் பெயர்ந்துள்ளனர்.

இவ்வாறு இடம்பெயர்ந்துள்ள மக்கள் சிலர் உறவினர் வீடுகளிலும், தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் பிரதேச மட்டத்திலான நலன் பேணும் நிலையங்களிலும் வாழ்ந்து வருகின்றனர்.

அக்கராயன் பிரதேசத்தில் வாழ்ந்து வருகின்ற மக்களுக்கு தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினால் உணவில்லாத அத்தியாவசியப் பொருட்கள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வு அக்கராயன் அபிவிருத்தி நிறுவன வளாகத்தில் கடந்த திங்கட்கிழமை காலை 10.30 மணியளவில் நடைபெற்றது.

அத்துடன் கிளிநொச்சி, கண்டாவளை, வட்டக்கச்சி, பூநகரி, முழங்காவில், பளை ஆகிய பிரதேசங்களில் தங்கியுள்ள மக்களுக்கும் தொடர்ச்சியாக பொருட்கள் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## புதிய விளையாட்டுக்கழகம்

பூநகரி

பூநகரி - பள்ளிக்குடா செட்டியார் தரைவெளி கிராமத்தில் புதிய விளையாட்டுக் கழகம் கடந்த சனிக்கிழமை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில் தமிழீழ விளையாட்டுத்துறையின் பூநகரிப் பிரதேச இணைப்பாளர் சத்தியமூர்த்தி கலந்துகொண்டு புதிய கழகத்தை ஆரம்பித்து வைத்தார்.

இந்த விளையாட்டுக் கழகம் 40 அங்கத்தவர்களைக் கொண்டுள்ளதாக விளையாட்டுக்கழகத் தலைவர் த.ஜெகதாஸன் தெரிவித்தார். (பூ)

# இலங்கைத் தமிழர் வரலாற்று மூலங்கள் ஆய்வாளர்களுக்கு ஓர் அரிய பொக்கிசம்

## கல்விக்கழகப் பொறுப்பாளர் இளங்குமரன்



முல்லைத்தீவு

இலங்கைத் தமிழர் வரலாற்று மூலங்கள் நூல் வெளியீடானது வரலாற்று ஆய்வாளர்களுக்கும், மாணவர்களுக்கும் அரிய பொக்கிஷமாக விளங்குமென்றால் மிகையாகாது என தமிழீழக் கல்விக் கழகப் பொறுப்பாளர் வெ. இளங்குமரன் தெரிவித்தார்.

முல்லைத்தீவு - விசுவமடு இளையோர் அறிவியற்கழக கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற இலங்கைத் தமிழர் வரலாற்று மூலங்கள் எனும் நூல் வெளியீட்டு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

இந்த நூல் வெளியீடானது வரலாற்று ஆய்வாளர்களுக்கும், மாணவர்களுக்கும் மகிழ்ச்சியைத் தரக்கூடியது. ஏனென்றால் வரலாற்று வெறுமைக்குள் நீண்ட வரலாற்றுச் சான்றுகள் எவையும் இல்லாமல் தமிழரின் வரலாறு துண்டு துண்டாக வெளிவந்துள்ள சூழலில், தமிழரின் முழுமையான வரலாற்றைப் படைக்க வேண்டுமாக இருந்தால் அதற்குரிய சான்றுகள் வெளிக்கொணர வேண்டிய நிலையில் அதற்கான தேடுதலை பல்வேறு அறிஞர்கள்மேற்கொண்டு வந்துள்ளார்கள்.

அகழ்வாய்வு என்ற வகையிலேயே பலர் அகழ்வாய்வை மேற்கொண்டுள்ளனர். நூல் ஆய்வுகள் ஊடாகவும், குறிப்புகள் ஊடாகவும் பலர் ஆய்வுகளை மேற்கொண்டுள்ளனர்.

இருந்த போதிலும் ஈழத்தமிழர் வரலாற்றை முழுமையாக வெளிக்கொணரக்கூடிய நூல் இதுவரை வெளிவரவில்லை என்ற ஏக்கத்தோடு இருந்த சூழலில் முருகர் குணசிங்கத்தின் நூல் வெளிவந்துள்ளது.

இந்த நூல் வரலாற்றை ஆய்வு செய்பவர்களுக்கும், மாணவர்களுக்கும் அரிய பொக்கிஷமாக விளங்குமென்றால் மிகையாகாது.

இலங்கை வரலாற்றை எழுதப்போகும் எவருக்கும் முருகர் குணசிங்கத்தின் நூலை உசாத்துணை நூலாகப் பயன்படுத்தாமல் எழுத முடியாது என்ற அளவுக்கு இந்த நூல் சிறப்புப் பெற்றுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார்.

முன்னாள் பிரதிக் கல்விப் பணிப்பாளர் க.சரவணபவான் மதிப்பீட்டு உரை நிகழ்த்தினார்.

அவுஸ்ரேலியா-சிட்னியைச் சேர்ந்த கலாநிதி முருகர் குணசிங்கம்- எழுதிய இலங்கைத் தமிழர் வரலாற்று மூலங்கள் நூல் அறிமுகவிழா முல்லைத்தீவு - விசுவமடு இளையோர் அறிவியற்கழகக் கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் பிற்பகல் 4 மணியளவில் நடைபெற்றது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் அனைத்துலகத் தொடர்பகத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த நிகழ்வில், முதன்மைச் சுடரை மாவீரர்கள் கப்டன் செம்மலை, ஆனந்தன் ஆகியோரின் தாயார் ஏற்றி வைத்தார்.

தமிழீழத் தேசியக் கொடியை தமிழீழ கல்விக் கழகப் பொறுப்பாளர் வெ.இளங்குமரன் ஏற்றி வைத்தார். தலைமையுரையை படைப்பாளர் பு.சத்தியமூர்த்தி நிகழ்த்தினார். நூலின் வெளியீட்டுரையை கலாநிதி சோமஸ்கந்தன் நிகழ்த்தினார்.

நூலின் முதல் பிரதியை தமிழீழக் காவல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன் வழங்க, தமிழீழக் கல்விக் கழகப் பொறுப்பாளர் வெ.இளங்குமரன் பெற்றுக் கொண்டார்.

நூலின் மதிப்பீட்டுரையை முன்னாள் பிரதிக் கல்விப் பணிப்பாளர் க.சரவணபவான் நிகழ்த்தினார். இந்த நிகழ்வின் இறுதியில் கிச்சான் குறும்படம் திரையிடப்பட்டது.

# கிறிஸ்தவ பிரதிநிதிகள் கிளிநொச்சிக்கு வருகை!

கிளிநொச்சி

வடக்கு - கிழக்கில் நடைபெறும் படுகொலைகள் மற்றும் ஆட்கடத்தல்கள் குறித்து கவலைதெரிவித்துள்ள கத்தோலிக்க சபை மற்றும் 5 கிறிஸ்தவ அமைப்புகளின் பிரதிநிதிகள் அடுத்த இருவாரங்களில் கிளிநொச்சி வரவுள்ளனர்.

கத்தோலிக்க சபை மெதடிஸ்த சபை, இலங்கை சபை, பப்டிஸ்ட் சபை, இரட்சண்ய சேவை ஆகிய சபைகளைச் சேர்ந்த பிரதிநிதிகளே கிளிநொச்சி வரவுள்ளனர்.

தேசிய கிறிஸ்தவ சபையின் பிரதிநிதிகளும் இந்தப் பயணத்தில் இணைந்து கொள்ள விருப்பம் தெரிவித்துள்ளனர். இந்தப் பயணத்தின் போது விடுதலைப் புலிகளால் தடுத்து வைக்கப்பட்ட 3 பொலிஸ் அதிகாரிகளையும் விடுவிப்பது தொடர்பான பேச்சுக்களை மேற்கொள்ளவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

# சொந்த இடங்களுக்குத் திரும்ப பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டும்!

## பேசாலையிலிருந்து இடம்பெயர்ந்த மக்கள் தெரிவிப்பு

மன்னார்

நாம் சொந்த இடங்களுக்குச் செல்ல வேண்டுமானால் எமது பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டுமென பேசாலையிலிருந்து இடம்பெயர்ந்த மக்கள் தெரிவித்தனர்.

மன்னார் மாவட்டத்தில் துள்ளுக்குடியிருப்பு 100 வீட்டுத் திட்டப் பகுதியிலிருந்து கடற்படையினரின் அச்சுறுத்தல் காரணமாக வெளியேறிய 134 குடும்பங்கள் பேசாலை புனித வெற்றி நாயகி தேவாலய முன்பள்ளிக் கட்டடத்தில் தங்கியுள்ளனர்.

இடம்பெயர்ந்துள்ள மக்கள் கருத்துத் தெரிவிக்கையில் எமது சொந்த இடங்களுக்குச் செல்ல முடியாத சூழ்நிலை மீண்டும் கடற்படையினர் உருவாக்கியுள்ளனர். பெண்கள், வயோதிபர், சிறுவர்கள் என வேறுபாடின்றி மிகவும் கொடூரமான முறையில் தாக்கப்பட்டனர்.

இது குறித்த செய்திகள் வெளியில் வராததையிட்டு மிகவும் வேதனை அடைகின்றோம்.

ஒரு வயது பிள்ளை படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறது. 4 வயதுக் குழந்தை கண்டதுண்டமாக வெட்டப்பட்டு கொலைசெய்யப்பட்டிருந்தது. இதனைப் பார்த்த மற்றைய குழந்தைகள் கடற்படையிரைக் கண்டால்பயந்து ஓடும் நிலை காணப்படுகிறது. இதனால் எமது சொந்த இடங்களுக்கு செல்ல முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம்.

எங்களுக்கென்று ஒரு தாயகம் உருவாகினால் மட்டுமே நாங்கள் சுதந்திரமாகவும், சந்தோஷமாகவும் வாழ முடியும்.

அத்துடன் மீண்டும் சொந்த இடத்துக்கு நாங்கள் செல்ல வேண்டும் என்றால் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படவேண்டும். அத்துடன் வெளிநாட்டு நிறுவனங்கள் இருந்தால் மட்டுமே நாங்கள் அங்கு மீளக்குடியேறுவோம் என அவர்கள் தெரிவித்தனர்.



இலங்கைத் தமிழ் வரலாற்று மூலங்கள் நூல் வெளியீட்டு விழாவில் பொதுச்சுடரை மாவீரர்கள் கப்டன் செம்மலை, ஆனந்தன் ஆகியோரின் தாயார் ஏற்றிவைப்பதையும், தமிழீழ தேசியக் கொடியை தமிழீழக் கல்விக் கழகப் பொறுப்பாளர் இளங்குமரன் ஏற்றுவதையும், நூலின் முதற் பிரதியை தமிழீழ காவல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன் வழங்க- தமிழீழ கல்விக் கழகப் பொறுப்பாளர் இளங்குமரன் பெற்றுக்கொள்வதையும் நிகழ்வில் கலந்துகொண்ட பிரமுகர்களையும் படங்களில் காணலாம்.

நமது ஈழநாடு

வைர வரிகள்

உறின்உயிர் அஞ்சா மறவர் இறைவன்
செறினும்சீர் குன்றல் இலர்.

திருக்குறள்.

## நமது நோக்கு

# பேரினவாதத்துக்கு ஊக்கம்

போருக்குத்திரும்பினால் நாடு அதிக விலை கொடுக்க நேரிடும் என்று எச்சரித்திருக்கிறார் அமெரிக்கத் தூதுவர் ஜெப்ரி லன்ஸ்ரீட். அவுஸ்ரேலிய வெளிவிவகார அமைச்சர்– வன்முறைகளைத் தடுத்துநிறுத்த இரண்டு தரப்பும் முன்வர வேண்டும் என்று கோரியிருக்கிறார்.

உலகவங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி போன்றனவும் இதே போன்று இலங்கையில் அதிகரித்துவரும் வன்முறைகளைக் கட்டுப்படுத்தவேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளன.

திடீரென்று நாடு போர்ச்சூழலுக்குள் தள்ளப்பட்டுக் கொண்டிருப்பதை அமெரிக்கா போன்ற நாடுகளும் சரி, நிதி நிறுவனங்களும் சரி தெளிவாகப் புரிந்து கொண்டிருப்பது தெரிகிறது.

இந்த நெருக்கடிக்கு என்ன காரணம், யார் காரணம், என்பதை தெரிந்திருந்தும் வெளிநாடுகள் அதைக் கண் டும் காணாமல் இருந்துகொண்டு இப்படிப்பட்ட வேண்டு கோளை – எச்சரிக்கைகளை விடுத்துவருகின்றன.

இலங்கை அரசாங்கத்தை சமாதான முன்னெடுப்புக்களில் இதய சுத்தியுடன் பங்கேற்க வலியுறுத்தாத சர்வதேச சமூகம், அரச பயங்கரவாதத்தை தடுத்து நிறுத்தத் தவறியுள்ள சர்வதேச சமூகம், தமிழர் தரப்பை வித்தியாசமான நோக்கில் பார்க்க முற்படுவது தவறாகும்.

இந்தத் தவறான நிலைப்பாடு காரணமாக தமிழ் மக்கள் விரக்தியின் விளிம்புக்கே செல்லும் நிலை தோன்றியுள்ளது. சர்வதேச சமூகம் தமிழ் மக்களின் தாயகம், தேசியம், தன்னாட்சி என்பவற்றை அங்கீகரித்தும் நியாயபூர்வமான தீர்வொன்றைப் பெற்றுத்தர வேண்டும் என்றுதான் தாயகம் தழுவிய ரீதியில் கோரியிருந்தனர்.

லட்சக்கணக்கான மக்கள் பொங்குதமிழ் நிகழ்வுகளில் ஒன்று குழுமி சர்வதேசமே நீதியைத்தா? என்று கேட்டபோது அவர்களுக்கு என்ன கிடைத்தது?

கடைசியாக சம்பூரில் நடந்த தமிழ் தேசிய எழுச்சிப் பிரகடன நிகழ்வுகளிலும்கூட சர்வதேசமே எங்களை அங்கீகரி, இல்லையேல் மக்கள் படையணி போராடும் என்றுதான் சொல்லியிருக்கிறார்கள்.

தமிழர் தரப்பு ஒருபோதும் பேச்சுக்களை, சமாதான முயற்சிகளை வேண்டாம் என்று தூர எறிந்துவிட்டுச் சென்றதில்லை. ஆனால் சிங்கள பௌத்த பேரினவாதம் தமிழ் மக்களுக்கு நியாயமான தீர்வு வழங்கமுடியாத கட்டத்தில் – தமிழ் மக்களை யுத்தத்துக்குள் தள்ளிவிட்டு தாம் தப்பித்து வந்தது.

அரசின் அராஜக நடவடிக்கைகளைக் கண்டும் காணாமல் இருந்துவிட்டு தமிழர் தரப்பை நோக்கி சுட்டுவிரலை நீட்டுவதானது எந்தப் பயனையும் கொடுக்கப்போவதில்லை.

சமாதானம் என்ற போலியான மாயத் திரையைப் போட்டுக் கொண்டு சர்வதேச சமூகத்தை சிங்களப் பேரினவாதம் ஏமாற்ற முனைகிறது. அதுவும் புதிய அரசு பொறுப்பேற்ற பின்னர்தான் தமிழ் மக்கள்மீது மோசமான அட்டூழியங்கள் கட்டவிழ்த்து விடப்படுகின்றன.

இந்த அட்டூழியங்கள் இப்போது உச்சக்கட்டத்தை அடைந்திருக்கின்றன. இதற்கு முழுப்பொறுப்புமே இலங்கை அரசுதான்.

திருகோணமலையில் 5 தமிழ் மாணவர்களைப் படுகொலை செய்தது பாதுகாப்பு அமைச்சின் விசேட ஆலோசகர் எச்.எம்.ஜி.பி.கொட்டகதெனியாவால் அனுப்பப்பட்ட 24 பேர் கொண்ட விசேட அதிரடிப் படையணிதான்.

ஒரு படுமோசமான சிங்கள பௌத்த பேரினவாதக் கட்சியின் பிரதிநிதியான இவர் மகிந்த ராஜபக்ஷவின் ஆலோசகராக இருந்துகொண்டு அனுப்பிவைத்த படைகள் நடத்திய வெறியாட்டம்தான் திருகோணமலையில் தொடர்ச்சியான வன்முறைகளுக்குக் காரணமாகியது. அதேபோன்றே நீர்வேலியில் இரு அப்பாவிகளின் படுகொலையுடன்தான் யாழ்.குடாநாட்டில் வன்முறைகள் தலைதூக்கின.


இவற்றையெல்லாம் சர்வதேச சமூகம் ஏன் கவனத்தில் கொள்ளவில்லை. தேவாலயத்துக்குள் வைத்து ஜோசப் பரராஜசிங்கம் என்ற நாடாளுமன்ற உறுப்பினர் படுகொலை செய்யப்பட்டபோது, சர்வதேச சமூகம் கண்டனம்கூடத் தெரிவிக்கவில்லை.

தமிழ் மக்களின் நலனில் சர்வதேச சமூகம் அக்கறை கொண்டுள்ளது என்பது உறுதியானால், அவர்களுக்கு நியாயமான உரிமைகள் வழங்க அரசாங்கத்துக்கு அழுத்தம் கொடுக்கவேண்டும்.

அதைவிட்டுவிட்டு எச்சரிக்கைகளையும், வேண்டுகோள்களையும் தமிழர் தரப்பை நோக்கி விடுவது இன்னும் இன்னும் சிங்கள பௌத்த பேரினவாதத்துக்கு வலுவூட்டி – அவர்களை தமிழின அழிப்பில் ஈடுபடவே ஊக்கம் கொடுப்பதாக அமையும்.

267, Navalar Road,
Jaffna.
T.P. - 021-2225107
www.eezhanaadu.com

## நாடும் நடப்பும்




# மார்ச் மாதத்துக்குள் பத்தாயிரம் பேருக்கு அடையாள அட்டைகள்

கொழும்பு—

எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலுக்கு முன்னர் தேசிய அடையாள அட்டைகள் இல்லாத பத்து இலட்சம் பேருக்கு அடுத்த மார்ச் மாதத்திற்குள் அடையாள அட்டைகள் வழங்கப்படுமென ஆட்பதிவுத் திணைக்கள ஆணையாளர் எஸ்.கே.கீதசேன தெரிவித்துள்ளார்.

இதன்படி பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவத்தை ஆட்பதிவுத் திணைக்களத்தில் ஒப்படைப்பதற்கு இதுவரை காலமும் கிராம சேவகர்களுக்கு வழங்கப்பட்டு வந்த 75 சதம் நான்கு ரூபாவரை அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

2004இல் 14 இன் தேர்தல் சட்டத்தின் கீழ் தேசிய அடையாள அட்டை வழங்குவது தொடர்பாக நடவடிக்கைகளை கண்காணிக்கும் நாடாளுமன்ற கட்சித் தலைவர்களின் குழுவினால் இதுவரை அடையாள அட்டை பெறாத அனைத்து வாக்காளர்களுக்கும் அடையாள அட்டை வழங்க ஆலோசனை வழங்கப்பட்டுள்ள இரண்டு நாள் வேலைத்திட்டத்திற்கமைய புதிய வேலைத்திட்டம் செயற்படுத்தப்படும்.

இதற்காக பொதுமக்கள் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை ஒப்படைக்கும் இரண்டு நாள் வேலைத் திட்டங்கள் அடுத்த மாதம் 18, 19 ஆம் திகதிகளில் செயற்படுத்தவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதன் முதல் நடவடிக்கையாக தற்பொழுது கிராம சேவையாளர்கள் தமது பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் வீடு வீடாகச் சென்று படிவங்களை விநியோகிக்கும் நடவடிக்கை எதிர்வரும் 27ஆம் திகதிக்கு முன்னர் மேற்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதற்காக 21 இலட்சம் அடையாள அட்டை விண்ணப்பங்கள் பிரதேச செயலகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இந்த விண்ணப்பப்படிவங்களை கிராம அலுவலர்கள் பொது மக்களுக்கு வழங்கும்போது பூரணப்படுத்தப்பட்ட படிவங்களுடன் 5வர்ண புகைப்படங்கள் பிறப்பு சான்றிதழ்களின் மூலப்பிரதி மற்றும் நிழற்பட பிரதி மற்றும் ஆவணங்களை அடுத்த மாதம்18, 19 ஆம் திகதிகளில் மீள ஒப்படைக்க வேண்டுமென தெரிவிக்க வேண்டுமென ஆட்பதிவுத் திணைக்கள ஆணையாளர் பிரதேச செயலர்களுக்கு அனுப்பி வைத்துள்ள சுற்றறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இந்த அறிக்கைக்கு அமைய விண்ணப்பதாரிகளால் ஒப்படைக்கப்படும் விண்ணப்பங்கள் உறுதிப்படுத்தப்பட்டு பிரதேச செயலரிடம் அடுத்த மாதம் 24 ஆம் திகதிக்கு முன்னர் ஒப்படைக்க வேண்டும். பிரதேச செயலர்கள் இந்த விண்ணப்ப படிவங்களை மார்ச் மூன்றாம் திகதிக்கு முன்னர் ஆட்பதிவுத் திணைக்களத்தில் சமர்ப்பிக்க வேண்டும். (தே)

### காணிகள் கொள்வனவு குறைகிறது

யாழ்ப்பாணம்—

குடாநாட்டில் காணிகள் கொள்வனவு மற்றும் விற்பனை செய்யும் நடவடிக்கைகள் வெகுவாகக் குறைவடைந்துள்ளதாக காணித்தரகர்கள் தெரிவிக்கின்றனர்.

போர் நிறுத்த உடன்படிக்கையை அடுத்து குடாநாட்டில் காணிகளின் விலைகள் வெகுவாக அதிகரித்துக் காணப்பட்டதுடன் கொள்வனவிலும் மக்கள் பெரிதும் நாட்டம் காட்டி வந்தனர். எனினும் தற்போது ஏற்பட்டுள்ள அசாதாரண சூழலையடுத்து மக்கள் காணிகளில் முதலிடத்தயக்கம் காட்டி வருகின்றனர். பத்திரிகைகளிலும் காணிகள் தொடர்பான விளம்பரங்கள் குறைவடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (90)

# அதிகரித்த சம்பளக் கொடுப்பனவு இந்த வாரத்துக்குள் சுற்றறிக்கை

கொழும்பு—

2006ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில், அரச ஊழியர்களுக்கு அதிகரிக்கப்பட்ட ஆயிரம் ரூபா கொடுப்பனவை வழங்குவது தொடர்பான சுற்றறிக்கை இந்த வாரத்துக்குள் விநியோகிக்கப்படுமென அரச பொது நிர்வாக மற்றும் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் நிறுவனப் பணிப்பாளர் டி.ஜி.கருணாரட்ண தெரிவித்தார்.

குறித்த சுற்றறிக்கையை விநியோகிப்பது தொடர்பான நடவடிக்கைகள் முடிவடைந்துள்ளன. திறைசேரியின் அனுமதி கிடைத்தவுடன் இந்த சுற்றறிக்கை விநியோகிக்கப்படும்.

இந்த அதிகரித்த கொடுப்பனவு இந்த மாத சம்பளத்துடன் வழங்கப்படுமெனவும் அவர் தெரிவித்தார். (தே)

# உள்ளூராட்சி தேர்தலை ஒத்திவைக்குமாறு பவ்ரல் அமைப்பு அரசிடம் கோரிக்கை

யாழ்ப்பாணம்—

உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலை ஒத்திவைக்குமாறு பவ்ரல் அமைப்பு அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளது. உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலை குறைந்தது 6 மாதங்களுக்கு ஒத்திவைக்குமாறு பவ்ரல் அமைப்பு ஜனாதிபதியிடமும் உள்ளூராட்சித் தேர்தல் ஆணையாளரிடமும் கோரிக்கை விடுத்துள்ளது.

இதுதொடர்பாக பவ்ரல் அமைப்பின் யாழ்.மாவட்ட ஆணையாளர் பா.நிர்மானுஜன் தெரிவிக்கையில் -

இவ்வாண்டு நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபைத்தேர்தலை பிற்போட வேண்டும் என அமைப்பின் சார்பில் நாம் கேட்டுக்கொள்கின்றோம்.

2005 ஆம் ஆண்டு வாக்காளர் பதிவேட்டின்படியே இந்தத் தேர்தல் நடைபெறவேண்டும். இதேவேளை 2005 ஆம் ஆண்டில் தேர்தல்வாக்காளர் பட்டியலில் பலரின் பெயர்கள் இணைக்கப்படவில்லை என எமது அமைப்புக்கு ஆயிரத்துக்கும் மேற்பட்ட முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. இவ்வாறு பல்லாயிரக் கணக்கான வாக்காளர்களின் பெயர்கள் வாக்காளர் பட்டியலில் இணைக்கப்படாது தேர்தல் நடத்துவது என்பது நீதியற்ற செயல் எனவும் நாம் கருதுகிறோம்.

இதைவிட கடந்த ஆண்டில் வடக்கு கிழக்கில் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் போட்டியிடுவதாக இருந்த 20இற்கு மேற்பட்ட வேட்பாளர்கள் பல காரணங்களால் கொல்லப்பட்டிருப்பதுடன் 19 இற்கும் மேற்பட்ட வேட்பாளர்கள் கட்சி மாறியுள்ளனர். எனவே, வேட்பு மனுத்தாக்கல் மீண்டும் ஒருதடவை நடைபெறவேண்டும். இந்த விடயங்கள் நாடாளுமன்ற முன்னெடுப்புகள் ஊடாக மேற்கொள்ளப்படவேண்டும்.

இதற்குக் கணிசமான காலப்பகுதி தேவைப்படும். இவற்றைவிட கடந்த ஆண்டு நவம்பர் மாதம் தேர்தலின் போது வாக்காளர் அட்டையாள அட்டை அல்லது அதற்கு மாற்றீடான ஆவணம் தேவையென நாடாளுமன்றத்தில் சட்டம் ஒன்று கொண்டுவரப்பட்டுள்ளது. இதனை நடைமுறைப்படுத்தும்போது போதிய காலம் தேவைப்படுகின்றது. நாடாளுமன்ற தேர்தல் குழுவின் தலைவர் தினேஷ் குணவர்த்தன இதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென கேட்டுக் கொண்டதாக அவர் மேலும் தெரிவித்தார்.

### ஓய்வூதியத் திகதிகள் அறிவிப்பு

கொழும்பு—

அரச சேவையிலிருந்து ஓய்வு பெற்றவர்கள் இந்த வருடம் தமது ஓய்வூதியத்தைப் பெறுவதற்கான திகதிகள் அறிவிக்கப்பட்டுள்ளன. அவற்றின் விபரம் வருமாறு - ஜனவரி 10 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை, பெப்ரவரி 9 ஆம் திகதி வியாழக்கிழமை, மார்ச் 9 வியாழக்கிழமை, ஏப்ரல் 6 வியாழக்கிழமை, மே 10 புதன்கிழமை, யூன் 8 வியாழக்கிழமை, யூலை 11 செவ்வாய்க்கிழமை, ஓகஸ்ட் 10 வியாழக்கிழமை, செப்ரெம்பர் 12 செவ்வாய்க்கிழமை, ஒக்ரோபர் 4 புதன், நவம்பர் 9 வியாழன், டிசெம்பர் 7வியாழன். (98)

# இந்த வாரம் உங்கள் பலன் எப்படி? 13.01.2006 - 19.01.2006

| | | | |
|---|---|---|---|
| ராகு | செவ் | | சந் |
| யுரே | 13 மா.07.22 தனு - சுக்<br>14 ப.12.24 மக -சூரி<br>14 பி.ப3.32 கட - சந்<br>16பி.இ 3.31 சிங் - சந்<br>19 ப. 10.17 மக-புத<br>19 மா. 4.32 கன்-சந் | | சனி |
| சுக் நெப் | | | |
| சூ-புத | | குரு | கேது |

## மேடம்

(அஸ்வினி, பரணி, கார்த்திகை1ஆம் கால்)

மேடராசியில் பிறந்தவர்களுக்கு குடும்ப நிலை நன்றாக இருந்தாலும் இடையிடையே சச்சரவுகளும் ஏற்படும். வருவாய்க்கு மிஞ்சிய செலவு ஏற்படுவதால் பல தொல்லைகளை எதிர்நோக்க வேண்டியிருக்கும். வழிபாடுகள் மனத்திருப்தியைக் கொடுக்கும். குடும்பப் பெண்கள் சிக்கனத்தைக் கையாள வேண்டும். தொடங்கும் கருமங்கள் தாமதத்தை ஏற்படுத்தும். மங்கள கருமங்கள் காலந்தாழ்த்திக் கைகூடும். உத்தியோகத்தர்களுக்கு வருவாய் குறைவாகவே இருக்கும். சக ஊழியர்களால் தொல்லைகள் ஏற்படலாம். வர்த்தகர்களுக்கு வியாபாரம் சற்று மந்தமாகவே இருக்கும். முயற்சிக்கேற்ப இலாபமுண்டு. ஏற்றுமதி இறக்குமதியில் ஈடுபட்டுள்ளோர் இலாபமடைவர். தொழிலாளர்களுக்கு விருத்தி குறையும். ஒற்றுமையும், ஊக்கமும் தேவை. மாணவர்கள் முயற்சிக்கேற்ப பெறுபேறடைவர்.

## இடபம்

(கார்த்திகை 2,3,4 ரோகினி, மிருகசீரிடம் 1,2)

இடபராசியில் பிறந்தவர்களுக்கு குடும்ப வாழ்வில் மகிழ்ச்சி நிலவும். சுற்றாடலில் அமைதி ஏற்படும். பணவருவாய் திருப்திகரமாக இருக்கும். தேகசுகம் பாதிப்படையாது. எதிர்நோக்கும் கருமங்கள் கைகூடும். புத்திரர்களாலும், உறவினர்களாலும் உதவிகள் கிட்டும். மங்கள கருமங்கள் கைகூடும். உத்தியோகத்தர்களுக்கு பொதுமக்கள் மத்தியில் நல்ல அபிப்பிராயம் தென்படும். சக உத்தியோகத்தர்களின் உதவி உண்டு. அதிகாரிகளும் ஒத்துழைப்பு நல்குவர். வர்த்தகர்களுக்கு வியாபாரம் சிறப்பாக நடக்கும். ஆடம்பரப் பொருட்கள் விற்பனை செய்வோர் கூடுதல் லாபம் பெறுவர். தொழிலாளர்களுக்கு தொழில் விருத்தியுண்டு. வருவாய் சிறப்படையும். மாணவர்களுக்கு கல்வி முன்னேற்றமுண்டு.

## மிதுனம்

(மிருகசீரிடம் 3,4 திருவாதிரை,புனர்பூசம் 1,2,3)

மிதுனராசியில் பிறந்தவர்களுக்கு இவ்வாரம் சிறப்பான பலன்கள் தென்படுகின்றன. குடும்ப நிலை மிகச்சிறப்பாக இருக்கும். பணவருவாய் சிறப்பாக இருக்கும். புத்திரர்களால் மகிழ்ச்சியும், உதவியும் உண்டு. வீட்டில் சுப நிகழ்வுகள். இடம்பெறலாம். உறவினர்களின் வருகையால் வீடு கலகலப்பாக இருக்கும். மங்கள கருமங்கள் மனம்போல் கைகூடும். உத்தியோகத்தர்களுக்கு அலுவலகங்களில் வரவேற்பு பிரமாதமாக இருக்கும். மேலதிகாரிகளின் பாராட்டுக்கள் கிடைக்கும். சிலருக்கு பதவி உயர்வு கிடைக்கலாம். வர்த்தகர்களுக்கு வியாபாரம் சிறப்பாக நடக் கும். நிறைந்த லாபம் கிடைக்கும். புதிய முதலீடுகளுக்கு நன்று. தொழிலாளர்களுக்கு உற்சாகமும், ஆர்வமும் மிகும். வருவாய் சிறக்கும். மாணவர்களுக்கு பரீட்சைகளில் வெற்றி கிடைக்கும்.

## கடகம்

(புனர்பூசம் 4, பூசம், ஆயிலியம்)

கடகராசியில் பிறந்தவர்களுக்கு இவ்வாரம் நற்பலன்கள் தோன்றவில்லை. குடும்பத்தில் சச்சரவுகள் இருக்கும். நிம்மதி கிடையாது. புத்திரர்களால் தொல்லைகள் கூடும். வரவிலும் பார்க்க செலவுகள் அதிகரிக்கும். தேகசுகக் குறைவால் வைத்தியச் செலவும் கூடுதலாக இருக்கும். தொடங்கும் கருமங்கள் நிறைவேறாது. மங்கள கருமங்கள் காலதாமதத்தைக் கொடுக்கும். உத்தியோகத்தர்களுக்கு வேலைப்பளு அதிகரிக்கும். செவ்வனே பணியாற்ற முடியாமல் கஷ்டமடைவர். சக உதவிகளும் குறைவா கவே இருக்கும். வர்த்தகர்களுக்கு வியாபாரம் மந்தநிலை காட்டும். பழைய முதலீடுகள் தேங்கிக் கிடக்கும். வாடிக்கையாளர்களின் வரவு குறையும். புதிய முதலீடுகளைத் தவிர்த்தல் நன்று. தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்புக்கள் குறையும். மாணவர்களுக்கு முன்னேற்றங்கள் குறைவாகவே இருக்கும். முயற்சி தேவை.

## சிங்கம்

(மகம்,பூரம், உத்தரம்1)

சிங்க ராசியினருக்கு குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். வருவாய் சிறக்கும். புத்திரர்களாலும், உறவினர்களாலும் உதவிகள் உண்டு. எடுத்த கருமங்கள் தங்கு தடையின்றி வெற்றியளிக்கும். வெளிநாட்டிலிருந்து பண உதவி கிட்டும். தேகசுகம் சிறப்பாக அமையும். மங்கள கருமங்கள் மனம்போல் கைகூடி மகிழ்ச்சியைத் தரும். உத்தியோகத்தர்களுக்கு வருவாய் சிறக்கும். மக்களால் பாராட்டப்படுவர். சிலருக்கு பதவி உயர்வு கிடைக்கும். வர்த்தகர்களுக்கு வியாபாரம் கணிசமான லாபத்தைக் கொடுக்கும். வங்கி உதவிகள் கிட்டும். வியாபாரத்தைப் பெருக்க வாய்ப்புகள் உண்டு. தொழிலாளர்களுக்குள் ஒற்றுமை வலுக்கும். வருமானம் அதிகரிக்கும். மாணவர்கள் பலர் சிறப்புச் சித்தி பெறுவார்கள்.

## கன்னி

(உத்தரம் 2,3,4 அத்தம், சித்திரை 1,2)

கன்னி ராசிக்காரருக்கு குடும்ப நிலை நன்றாக இருந்தாலும் இடையிடையே சச்சரவுகள் தோன்றும். பணவருவாய் பற்றாக்குறையாக இருக்கும். குடும்பச் செலவுகளை மட்டுப்படுத்திக் கொள்ள வேண்டும். தொடங்கும் கருமங்கள் தாமதத்தின் மேல் நிறைவு பெறும். தேகசுகத்தை பேணிக்கொள்வது நன்று. விவாகம் முதலிய மங்கள கருமங்கள் தாமதத்தின் மேல் நிறைவேறும். உத்தியோகத்தர்களுக்கு வேலைப்பளு இருந்தாலும் சக ஊழியரின் உதவியுடன் சமாளிக்கலாம். முன்னேற்றங்கள் கிடையாவிடினும் காரியாலய கருமங்கள் சீராக நடக்கும். வர்த்தகர்களுக்கு வியாபாரம் ஓரளவு நடைபெறும். வங்கி உதவிகள் தாம தமாகவே கிடைக்கும். லாபம் குறைவாகவே கிட்டும். தொழிலாளர்களுக்கு கூட்டுறவில் முன்னேற்றம் திருப்தியாக இருக்கும். தொழில் சீராக நடக்கும். மாணவர்கள் கல்வியில் கூடிய சிரத்தை எடுத்தால் சித்தி உண்டு.

## துலாம்

(சித்திரை 3,4 சுவாதி, விசாகம் 1,2,3)

துலா ராசிக்காரருக்கு குடும்ப வாழ்வில் மகிழ்ச்சி அதிகரிக்கும். உறவினர்களுடன் கொண்டாட்டம் கூடுதலாக இருக்கும். பணவருவாய் திருப்தி தரும். தொடங்கும் கருமங்கள் வெற்றியளிக்கும். பெண்கள் மகிழ்ச்சியுடன் காணப்படுவர். மங்கள கருமங்கள் நிறைவேறும் தறுவாயில் இருக்கும். உத்தியோகத்தர்களுக்கு அரசியல் லாபங்கள் கிடைக்கலாம். கருமங்கள் சீராக நடக்கும். அதிகாரிகள் ஒத்துழைப்பார்கள். வர்த்தகர்களுக்கு முதலீடுகள் விற்பனையாகும். வாடிக்கையாளர்கள் வரவு கூடுதலாக இருக்கும். வியாபாரம் சுறுசுறுப்படையும். தொழிலாளர்களுக்கு திருப்திகரமான முன்னேற்றமுண்டு. மேலதிக வேலை செய்வோர் நல்ல சம்பளம் பெறுவர். மாணவர்கள் முன்னேற் றம் காண்பர்.

## விருச்சிகம்

(விசாகம் 4, அனுஷம், கேட்டை)

விருச்சிக ராசியினருக்கு குடும்பத்தில் சச்சரவுகள் தோன்றியவண்ணமிருக்கும். புத்திரர்களால் தொல்லைகள் அதிகரிக்கும். தொடங்கும் கருமங்கள் இழுபறி நிலையில் இருக்கும். தேக சுகக்குறைவால் வைத்தியச் செலவு கூடும். வருவாய் போதாது கடன் தொல்லைகள் ஏற்படலாம். மங்கள கருமங்கள் காலவரையறையின்றி இழுபடும். உத்தியோகத்தர்களுக்கு நிம்ம திக் குறைவு, நித்திரையின்மை காட்டும். தேவையில்லாத பிரச்சினைகள் உருவாகும். வியாபாரிகளுக்கு லாபம் குறைவாகவே கிடைக்கும். பணவிஷயங்களில் எச்சரிக்கை தேவை. கடன் வியாபாரம் கஷ்டங்களைத் தரும். தொழிலாளர்களுக்கு தொழில்வாய்ப் புகள் குறைவாகவே இருக்கும். பிரச்சினைகள் தோன்றும். மாணவர்களுக்கு கல்வி முன்னேற்றத்தில் தடங்கல் ஏற்படலாம்.

## தனுசு

(மூலம், பூராடம், உத்தராடம், 1)

தனுசு ராசியில் பிறந்த வர்களுக்கு குடும்பத்தில் நல்லுறவு நிலவினாலும் இடையிடையே சச்சரவுகளும் தோன்றும். பணவருவாய் இருப்பினும் செலவுகளும் அதி கமாக இருக்கும். தொடங்குக் கருமங்களில் தடையேற் படினும் இறுதியில் வெற்றியளிக்கும். மங்கள கருமங்கள் தடைப் பட்டுப் பின் வெற்றிதரும். உத்தியோகத்தர்களுக்கு அலுவல்கள் சீராக நடக்கும். அதிகாரிகளுக்கேற்ப நடந்துகொள்ளுதல் நன்று. உயர் ச்சிகள் தாமதப்பட்டுக் கிடைக்கும். வர்த்தகர்களுக்கு வியாபாரம் நன்றாகவே நடக்கும். எனினும் வாடிக்கையாளர்களுக்கு ஏற்றவாறு நடந்துகொள்வது நன்று. புதிய முதலீடுகளைப் பொறுத்துச்செய்வது நன்று. தொழிலாளர்ளுக்கு முன்னேற்றம் உண்டு. கூடிய முயற்சி வருவாயைத்தரும். மாணவர்களுக்கு கல்வியில் ஊக்கம் அதிகரிக்கும். சிலருக்கு உயர்கல்வி கிட்டும்.

## மகரம்

(உத்தராடம் 2,3,4 திருவோணம், அவிட்டம் 1,2)

மகர ராசியில் பிறந்தவர்களுக்கு இவ்வாரம் சிறப்பான பலன்கள் தென்படும். குடும்பத்தில் நல்லு றவு நிலவும். வருவாய் அதிகரிக்கும். இனசன உறவுகள் சிறப்பாக இருக்கும். எண்ணிய கருமங்கள் வெற்றியளிக்கும். வீட்டில் சுபநிகழ்வுகள் நடக்கும். அந்நியோன்னிய உறவுகள் சிறக்கும். மங்கள கருமங்கள் வெற்றியளிக்கும். வீட்டில் சுபநிகழ்வுகள் நடக்கும். உத்தியோகத்தர்களுக்கு மனவிருப்பப்படி கருமங்கள் நடக்கும். அதிகாரிகளின் பாராட்டுக்கள் கிட்டும். வர்த்தகர்களுக்கு ஏற்றுமதி, இறக்குமதி வர்த்தகம் நல்ல பலனைத் தரும். வியாபாரமும் சுறுசுறுப் படையும். புதிய முதலீடுகளுக்கு நன்று. தொழிலாளர்களுக்குள் ஒற்றுமை வலுக்கும். புதிய தொழில் ஒப்பந்தம் செய்யப்படும். மாணவர்களுக்கு சிறப்பு சித்திபெற வாய்ப்புகள் உண்டு. உயர்கல்வி கைகூடும்.

## கும்பம்

(அவிட்டம் 3,4 சதயம், பூரட்டாதி 1,2,3)

கும்ப ராசியில் பிறந்தவர்களுக்கு குடும்ப வாழ்க்கை சிறப்பாக அமை யும். கணவன் மனைவி ஒருவருக்கொருவர் ஒத்துழைப்பு வழங்குவர். புத்திரர்களால் மகிழ்ச்சி கிட்டும். வருவாய் திருப்திகரமாக அமையும். தேகசுகம் நன்றாக இருக்கும். விவாகாதி சுககருமங்கள் சிறப்பாக நடக்கும். உத்தியோகத்தர்களுக்கு அரச உதவிகள் எதிர்பார்த்த வண்ணம் அமையும். சேவை க்கேற்ற மதிப்புக் கிடைக்கும். மேலிடத்தில் ஆதரவு மிகும். வர்த் தகர்களுக்கு வங்கி உதவிகள் பெற வாய்ப்பான காலம். தொழிலைப் பெருக்க வசதிகள் ஏற்பட லாகும். நல்லலாபம் கிட்டும். தொழிலாளர் களுக்கு புதிய தொழில்கள் கிடைக்கும். மேலதிக வேலை செய்வதால் கூடிய வருவாயைப் பெறுவர். மாணவர்களுக்கு கல்வியில் ஊக்கமும், நற்பெறுபேறுகளும் உண்டு. சிலருக்கு வெளிநாட்டுப் பயணம் கிட்டும்.

## மீனம்

(பூரட்டாதி 4, உத்தரட்டாதி, ரேவதி)

மீன ராசியில் பிறந்தவர்களுக்கு குடும்ப வாழ்க்கையில் பிரச்சினைகள் அதிகரிக்கும். உறவினர்கள் தொல்லை கொடுப்பார்கள். எக்கருமத்தையும் சீராகச் செய்ய முடியாத நிலை ஏற்படும். தேக சுகமும் இடையிடையே பாதிக்கப்படும். வரவுக்கு மிஞ்சிய செலவுகளைச் சமாளிக்கவேண்டியிருக்கும். உத்தியோகத்தர்களுக்கு கடமைகளைச் செய்வதில் பல சிரமங்கள் ஏற்படும். அதிகாரிகளின் கெடுபிடிகளும் அதிகமாகும். அமைதியைக் கடைப்பிடிப்பது நன்று. வர்த்தகர்களுக்கு வியாபாரங்களில் லாபம் கிடையாது. முதலீடு செய்ய பணவசதிகள் போதாமலிருக்கும். கடன்களையும் வசூலிப்பது கஷ்டம். தொழிலாளர்களுக்கு வேலைப்பொறுப்புகள் கூடும். உரிய காலத்தில் வேலைகளை முடிக்க முடியாத நிலை காணும். மாணவர்கள் விளையாட்டுக்களில் கூடுதலாக ஈடுபடுவர்.

# மகிந்தவின் இந்தியப் பயணம் கொடுத்த வெற்றி

(நேற்றைய தொடர்ச்சி...)

தமிழீழ மக்களின் துன்பத்தையும், துயரத்தையும் களைவதற்குத் தமிழகமக்



கள் தயாராகிவிட்டனர் என்பதைக் காணும் பொழுது மகிழ்ச்சி ஏற்படத்தான் செய்கிறது. இன்றைய தமிழ் நாட்டு மக்களின் உணர்வைப் பார்க்கும் பொழுது மகிந்தவின் இந்தியப் பயணம் இலங்கைக்குத் தோல்வியில் முடிந்தவேளையில் தமிழ் மக்களுக்கு இவரது பயணம் வெற்றியைத் தேடித்தந்துள்ளது என்பதே சாலப் பொருத்தமான கூற்றாகும்.

பேரினவாத வன்செயலால் 1983 ஆம் ஆண்டு இந்தியாவை நோக்கிச் சென்ற அவதியுற்ற மக்களை ஆதரித்து அரவணைத்த இந்திராகாந்தி வழிவந்த ஆட்சியாளர்கள் அவரின் வழியில் சரியான பாதையை தேர்ந்தெடுக்கவேண்டும். அன்று இவ்வாறு சென்ற மக்களை அகதிகள் என்று அழைத்தபொழுது அவர்கள் அகதிகள் அல்லர், யாருமற்றவர்கள்தான் அகதிகள். இங்கே ஆறுகோடி தமிழர்கள் அவர்களை அரவணைக்க உடன் பிறப்புக்களாக ஏற்றுக் கொள்ளத் தயாராக இருக்கும் பொழுது, அவர்களை அகதிகள் என்று அழைக்காதீர்கள் என்று குரல் கொடுத்த கலைஞர் அந்த உறுதியில் இருந்து விலகக் கூடாதென்பதும், எம்.ஜி.ஆர் வழியில் ஆட்சிநடத்துவதாகக் கூறும் ஜெய லலிதா கட்சி வேறுபாடுகளைக் கடந்து எம்.ஜீ.ஆர் போன்று தமிழீழ மக்களுக்காகக் குரல் கொடுக்கவேண்டும் என்பதும் இங்குள்ள மக்களின் எதிர்பார்ப்புகளாகும்.

உள்ளூர் அரசியலில் வெவ்வேறு கொள்கைகளையும், இலட்சியங் களைக் கொண்டிருந்தாலும் ஈழம் வாழ் தமிழ் மக்களின் வாழ்வா, சாவா போராட்டத்துக்குத் தார்மீக ஆதரவை வழங்க வேண்டிய பொறுப்பை ஒருமித்து எழுப்ப வேண்டும் என்பதே இங்குள்ளவர்களின் விருப்பமாகும். அப்பொழுதுதான் புதுடெல்கி அரசு தவறான பாதையைத் தேர்ந்தெடுக்க முடியாமல் தடுக்க முடியும். சிங்களம் எவ்வாறாவது சதிவலையின்றி மத்திய அரசுடன் இணைந்து தமிழீழ விடுதலைப் போரை நசுக்க முனையும். எனவே, தமிழக மக்கள் பிரிந்துநின்று குரல் கொடாது ஓரணியில் திரண்டு குரல் கொடுக்குமாயின் வெற்றி விரைவில் மலருமென்பது திண்ணம்.



மகிந்த ராஜபக்ஷ தனது பயணத்தின் மூலம் தமிழக மக்களின் உணர்வலைகள் எத்தகையது அது எவ்வாறு மூண்டு எழும் என்பதைக் காட்ட வழிகாட்டியுள்ளார். எனவே, மகிந்தவின் இந்தியப் பயணம் அவருக்குத் தோல்வியைக் கொடுத்த அதேவேளை, தமிழீழ மக்களுக்குப் பெரிய வெற்றியைக் கொடுத்துள்ளது. இது மேலும் இறுக்கமடையவேண்டும். அதுவே பெருவெற்றியாக அமையும். இதுவே தமிழ்நாட்டு மக்களிடமிருந்து ஈழத் தமிழன் எதிர்பார்க்கும் உதவியாகும்.

# யாழ். மாநகரசபையின் இந்த வருடத்துக்கான அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் அறிவிப்பு!

யாழ்ப்பாணம்—

யாழ். மாநகர சபையின் இந்த வருடத்துக்கான 58 வது வரவு செலவுத்திட்டத்தின் கீழ் பல்வேறு வகையான அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் ஆரம்பிக்கவும், சென்றஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட திட்டங்களை இந்த ஆண்டில் நிறைவு செய்யவும் திட்டமிடப்பட்டுள்ளதாக யாழ். மாநகர சபை ஆணையாளர் சீ.வி.கே சிவஞானம் தெரிவித்தார்.

நேற்று யாழ். மாநகர சபையில் நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் -

கடந்த ஆண்டில் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் உத்தேசிக்கப்பட்ட போதும், அவற்றை முழுமையாக நிறைவேற்ற முடியவில்லை. எவ்வாறாயினும், நொராட் திட்டத்தின் கீழ் வெள்ள வாய்க்கால் புனரமைப்பு மற்றும் குளங்கள் புனரமைப்பு வேலைகள் பூர்த்தியாக்கப்பட்டுள்ளன. அதேபோல், அந்த நிறுவனத்தின் நிதியுதவியுடன் கூட்டுப் பசளை உற்பத்தியகமும், பூர்த்தியாக்கப்பட்டு அதன் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இவற்றுடன், சிறுவர் பாதுகாப்பு நிறுவனத்தினர் திருநகர் பகுதி வடிகால் அமைப்புக்கு 15 இலட்சம் ரூபாவும், யூபிலி மகப்பேற்று நிலைய புனரமைப்புக்கு 8 இலட்சம் ரூபாவும் மொத்தமாக 23 இலட்சம் ரூபா நன்கொடையாக வழங்கியுள்ளார்கள்.

மாநகர சபையின் நிர்வாக விடயத்தில், ஆளணி விவகாரமும், அதிலும் குறிப்பாக நீண்டகாலமாகத் தற்காலிக, அமைய அடிப்படையில் சேவையாற்றுகின்ற தொழிலாளர்களின் நிரந்தரக் கோரிக்கைகள் சம்பந்தமாக காத்திரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு, சுத்திகரிப்புப் பகுதித் தொழிலாளர்கள் 60 பேரை நிரந்தரமாக்குவதற்கான அங்கீகாரம் வடக்கு - கிழக்கு மாகாணப் பிரதம செயலாளரிடமிருந்து பெறப்பட்டுள்ளது.

இதேபோல், மிக நீண்ட காலமாக தற்காலிக அடிப்படையில் சேவையாற்றும் குடும்பநல உதவியாளர்களை நிரந்தரமாக்குவதற்கு நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு, அதற்கான விண்ணப்பங்கள் வடக்கு-கிழக்கு மாகாணப் பிரதம செயலாளரிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இதைத் தொடர்ந்து வேலைப்பகுதி மற்றும் ஏனைய பகுதி தற்காலிக ஊழியர்களையும் நிரந்தரமாக்கக் கூடிய சாத்தியமான நடவடிக்கைகள் 2006 ஆம் ஆண்டில் எடுக்கப்படும்.

நடப்பு ஆண்டாயினும் சரி, எதிர்வரும் ஆண்டாயினும் சரி, சபையின் வருமானத்தில், போதியளவு பராமரிப்புச் செலவுகளுக்குத் தேவையான நிதியைப் பெறுவது சிரமமானதாகவே இருக்கிறது. உதாரணமாக 2005 ஆம் ஆண்டுக்கான ஆதனவரி சுமார் 67 இலட்சம் ருபாவாகும். கிட்டத்தட்ட இந்தத் தொகை, வீதி பராமரிப்புக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. எனினும், சுமார் 210 கிலோமீற்றர் வீதிகளை பராமரிக்க வேண்டிய நிலையில் இந்த நிதியைக் கொண்டு 6 கிலோ மீற்றர் வீதிகளை மட்டுமே பராமரிக்க முடியும். மிகவும் பாதிப்படைந்துள்ள மாநகர வீதிகளைப் புனரமைத்துப் பராமரிப்பதற்குக் கூட சபையின் நிதி நிலைமை சாதகமானதாக இல்லை என்பது அவதானிக்கக் கூடியதாகவுள்ளது.

எனவே, 2006 ஆம் ஆண்டில் வீதி பராமரிப்புக்கென அதிகரித்த நிதிஒதுக்கீட்டை ஏற்பாடு செய்வது மட்டுமன்றி, தேச நிர்மாணம் மற்றும் அபிவிருத்தி அமைச்சு, அரசாங்க அதிபர் போன்றோரிடமிருந்து வீதி பாராமரிப்புக்கு நிதி உதவி கோரும் நடவடிக்கையும் எடுக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் ஆண்டுக்கான வேலைத் திட்டங்களில் சுமார் 28 முக்கிய விடயங்கள் இனம் காணப்பட்டுள்ளன. கூடுமானவரை இவற்றை நிறைவேற்றுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும். நடப்பாண்டில் நெதர்லாந்து அரசாங்கத்தின் நிதியுதவியுடன் இரண்டு உழவு இயந்திரங்கள் திண்மக் கழிவகற்றும் நடவடிக்கைக்காக கொள்வனவு செய்யப்பட்டன.

இவற்றுக்கான இழுவைப் பெட்டிகள் சபை நிதியிலிருந்து கொள்வனவு செய்யப்பட்டன.

இதே போல் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்தின் உதவியுடன் நான்கு உழவு இயந்திரங்களை வாங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. அவை இந்த வருடம் கிடைக்குமென்று எதிர்பார்க்கப்படுகின்றது. இவற்றுடன் திண்மக் கழிவகற்றுவதற்கு Compact Loader, இயந்திரம் ஒன்றை ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித்திட்ட நிறுவனம் மூலம் பெறுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

திண்மக் கழிவு முகாமைத்துவம் தொடர்பான செயலணிகளை அமைத்து, குருநகர்ப் பகுதியை மாதிரிப் பகுதியாக எடுத்து, விழிப்புணர்வு ஏற்படுத்தும் முகமாக வீடுவீடாகச் சென்று கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டுள்ளன.

நகரத்தின் பல பகுதிகளில் குப்பை கூழங்களை கூடுமானவரை குறைக்கும் நடவடிக்கைகள் இவற்றின் மூலம் நிறைவேற்ற எதிர்பார்க்கப்படுவதுடன், குறிப்பிட்ட பகுதிகளில் சேதன, அசேதன கழிவுகளைப் பிரித்து பொதியிடக் கூடிய வகையில் சுற்றாடல் அதிகாரசபை மற்றும் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டம் போன்றவற்றின் உதவியுடன் குப்பைத்தொட்டிகள் அமைப்பதற்கும், பொதிப்பைகள் வழங்குவதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளன.

1986ஆம் ஆண்டு கொள்வனவு செய்யப்பட்ட தீயணைப்பு இயந்திரம் இருபது ஆண்டுக்கு மேலாக இன்னும் பாவிக்கப்பட்டுவருகிறது. இதனால் முறையான வகையில் தீ விபத்துக்களைக் கையாள்வது பாதிக்கப்பட்டுள்ளதைக் கவனத்திற் கொண்டு இந்தச் சேவையை அபிவிருத்தி செய்யும் முகமாக வரவு செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதுடன், உதவிகளும் கோரப்பட்டுள்ளன.

இவற்றுடன், நகரத்தை அழகுபடுத்துகின்ற நடவடிக்கைகளில் புல்லுக்குளம், ஆரியகுளம், கன்னாதிட்டிக்குளம் ஆகியன அபிவிருத்தி செய்வதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது. மேலும் நடைபாதை வியாபாரிகளுக்கான அங்காடியில் அவர்களை இருத்தவும், ஏற்கனவே கட்டிமுடிக்கப்பட்ட தனியார் பஸ் தரிப்பிடத்திற்கு தனியார் பஸ்களை மாற்றவும், அவை முனீஸ்வரன் வீதியூடாக பஸ் நிலையத்தை வந்தடையவும் நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளன.

அத்துடன், வண்ணான் குளப் பகுதிக்கான முழுமையான ஒரு அபிவிருத்தித் திட்டத்தையும், செங்குந்தா சந்தைக்கான ஒரு முழுமையான அபிவிருத்தித் திட்டத்தையும், புல்லுக்குளப் பகுதிக்கான ஒரு அபிவிருத்தித் திட்டத்தையும் தயாரித்து வழங்குமாறு நகர அபிவிருத்தி அதிகார சபையிடம் கோரப்பட்டுள்ளது.

சின்னக் கடை மேல்மாடிக்கான படிகள் அமைத்துக் கடைகளை வாடகைக்கு விடவும் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. நகரில் உடைந்து, சிதைந்து போயுள்ள திறந்த வெளியரங்கிற்குப் பதிலாக ஒரு கலாசார மண்டபம் அமைக்கும் நடவடிக்கையும் 2006 ஆம் ஆண்டுக்குள் மேற்கொள்ளப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்த விடயத்தில் தேச நிர்மாணம் மற்றும் அபிவிருத்தி அமைச்சின் உதவி கிடைக்கும் என நம்பப்படுகிறது.

இந்த நாட்டிலே தனக்கென ஒரு முழுமையான, அடிப்படை வசதிகளைக் கொண்ட ஒரு அலுவலகத் தொகுதியின்றி இயங்குகின்ற ஒரு மாநகரசபையாக எமது நிறுவனம் உள்ளது. சகல வசதிகளும் கொண்ட ஒரு மாநகரசபை அலுவலகம் மிக அவசியமாக இருக்கின்ற பொழுதும், அதனை அமைப்பதற்கான நிதி வளம் எந்தச் சந்தர்ப்பத்திலும் இச்சபையிடம் இல்லை என்பதால், அதற்கான நிதித் தேடலில் பல்வேறு அனுசரணையாளர்களும், நிதி வழங்குபவர்களும் முன்வரவேண்டுமெனக் கோரப்படுகின்றது. இந்த விடயங்களில் தேச நிர்மாணம் மற்றும் அபிவிருத்தி அமைச்சின் உதவி கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

யாழ். நவீன சந்தை பல ஆண்டு காலமாகத் தீந்தைப் பூச்சு செய்யப்படாது அதன் அழகு பாதிக்கப்பட்டுள்ளதைக் கவனத்திற்கொண்டு, அதற்கான தீந்தை பூசும் நடவடிக்கைகளை ஆண்டின் முதற்பகுதியிலேயே மேற்கொள்வதற்கான நிதி ஏற்பாடுகள் வரவு செலவுத் திட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. பொது விளையாட்டரங்கின் புனரமைப்பு வேலைகள் அடுத்த ஆண்டில் துரிதமாகப் பூர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

மட்டுப்படுத்தப்பட்ட ஒரு நிதி வளத்தோடு மாநகரசபை செயற்படுவதால், சகல தரப்பினரதும் உதவியை வேண்டி நிற்கின்ற ஒரு சூழ்நிலையில் இந்த நிர்வாகம் இருக்கின்றது. மேலும் இச்சபையின் பல்வேறு நடவடிக்கைகளிலும் மக்களை இணைத்துக்கொள்வதற்கான நடவடிக்கைகளும் எடுக்கப்படும்.

நகரத்தில் அமுல் செய்யப்படுகின்ற நிலைத்தகு நகராக்கல் அபிவிருத்தித் திட்டம் திறம்பட அடுத்த ஆண்டில் செயற்படுத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

யாழ். மாநகரை நோர்வேயின் றொம்சோ மாநகரத்தின் ஒரு இணை நகரமாக்கிச் செயற்படவும், அதன்மூலம் யாழ். நகரில் வடிகாலமைப்பை முழுமையாகச் சீரமைப்பதற்கான பூர்வாங்க உடன்படிக்கை ஒப்பமிடப்பட்டுள்ளது.

இவை எல்லாவற்றுக்கும் மேலாக நிர்வாகத்தில் காணக்கூடிய பல குறைபாடுகளையும், கணக்கியல் மற்றும் உள்ளகக் கட்டுப்பாட்டுத் தொய்வுகளைச் சீர்செய்து ஒரு சீரிய நிர்வாகத்தையும், சிறப்பான மக்கள் சேவையையும் வழங்குவதற்கு சகல மட்டப் பணியாளர்களதும், பொதுமக்களதும் ஒத்துழைப்பை நாம் வேண்டி நிற்கின்றோம்.

தொன்மையான யாழ்ப்பாண மாநகரம் அதன் பொலிவையும், புகழையும் மீண்டும் பெற நாம் எல்லோரும் கடினமாகவும் தமிழ்த் தேசிய உணர்வுடனும் உழைப்போமாக எனத் தெரிவித்தார்.

மாநகர சபையால் இந்த வருடத்தில் மேற்கொள்ளப்படவுள்ள அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் வருமாறு -

நீர் விநியோகத்திட்டம், வீதிகள் வலையமைப்பு, கழிவு நீர் அகற்றல், வாய்க்கால் மற்றும் வடிகாலமைப்பு, திண்மக்கழிவகற்றல் முகாமை, கூட்டுப்பசளை உற்பத்தி மற்றும் சேகரிப்பு உபகரணங்கள் வழங்கல், மாநகர சபை அலுவலகக் கட்டடத் தொகுதி, கலாசார மண்டபம்- திறந்தவெளி அரங்கிற்குப் பதிலாக, புல்லுக்குளம் மற்றும்ஆரியகுளம் அபிவிருத்தி, கன்னாதிட்டிக் குளம், வட்டக்குளம்,பாசையூர் குளம் அபிவிருத்தி,மினிபஸ் நிலைய மாற்றம், நடைபாதை வியாபாரிகள் சந்தை, விளையாட்டரங்கு அபிவிருத்தி, நவீன சந்தை- தீந்தை பூசுதல் மற்றும் மூன்றாம் கட்ட கட்டட அமைப்பு, சின்னக்கடைச் சந்தை - மாடிப்படி அமைத்தல், செங்குந்தாச் சந்தை கடைக் கட்டடத் தொகுதியும் மரக்கறிச் சந்தை மற்றும் மீன் சந்தை, இறைச்சிக் கடை அமைப்பும், தீயணைப்புச் சேவை - மேலதிக இயந்திரம்,வண்ணான் குளப்பகுதி அபிவிருத்தி, வீதிவிளக்குகள், ஜூபிலி மகப்பேற்று மனை புனரமைப்பு, நிர்வாக கணனி மயப்படுத்தல், சுப்பிரமணியம் பூங்கா, கிட்டு பூங்கா புனரமைப்பு, குருநகர், திருநகர், நாவாந்துறை, சூரியவெளி, பொம்மை வெளி ஆகிய பகுதிகளினுள்ள நெருக்கமான குடியிருப்பு, தாழ் நிலங்களை அபிவிருத்தி செய்தல், வாவியோர நிலமீட்பு, பொது நூலகத்துக்கு தீந்தை பூசுதல், பொது நூலக உணவுச்சாலை திறத்தல், எரிந்த நூலகத்தின் மாதிரியை உருவாக்குதல், மணிக்கூட்டு கோபுரப் புனரமைப்பு, நகர நல்லாட்சி எண்ணக்கரு பரப்புரை, ஐ.நா. வதிவிட நிறுவனத்தின் சமூக அபிவிருத்தி திட்டங்கள் - 10.

## இராட்சத மனிதர்கள் வாழ்ந்தமை ஆய்வு மூலம் கண்டுபிடிப்பு!

பாலக்காடு—

அளவுக்கு மீறிய உயரம் மற்றும் எடையுடன் கூடிய ராட்சத உருவமுள்ள மனிதர்களை கதைகளில் மட்டுமே படித்திருக்கிறோம். உருவங்களை கணினியில் கிராபிக்ஸ் செய்து பார்த்துப் பிரமித்திருக்கின்றோம்.

ஆனால் இது போன்ற உருவம் கொண்ட மனிதர்கள் வாழ்ந்திருப்பது உண்மை என்பது தற்போது ஆய்வு மூலம் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. அதுவும் இந்தியாவின் கேரள மாநிலம் பாலக்காடு அருகே அவர்கள் வாழ்ந்திருப்பது தெரியவந்துள்ளது.

பாலக்காடு அருகே காரல் மன்னா என்ற இடத்தில் காளிக்கடவு என்ற பகுதியுள்ளது. அங்கு சுமார் 10 ஏக்கர் நிலப்பரப்பில் பாறைகள் உள் ளன.

அங்குள்ள பாறையில் 29, 26,8.5 அங்குல நிளமுள்ள கால் தடங்கள் பதிந்துள்ளது. இந்த தடங்கள் ஆதிமனிதனின் காலடி என்று ஆய்வில் தெரியவந்துள்ளது.

கோவையைச் சேர்ந்த மனித கால் தடயவியல் விஞ்ஞானி ஆர். கிருஷ்ணசாமி குழுவினர் சமீபத்தில் ஆய்வு நடத்தி இதைக் கண்டுபிடித்தனர். 29 அங்குல நீளமுள்ள கால் தடம் ஆணின் கால் பாதமாக இருக்கலாம்.

26 அங்குல நீளமுள்ள கால் தடம் பெண்ணுடையதாக இருக்கலாம். அதேபோல் 8.5 அங்குல நீளமுள்ள கால் தடம் குழந்தையுடையதாக இருக்கலாம் என்று ஆய்வுத் தகவல் அறிக்கை தெரிவிக்கிறது.

29 அங்குல காலடித் தடத்தை வைத்துப் பார்க்கும் போது அந்த ஆதி மனிதன் சுமார் 17 அடி உயரமுள்ளவனாகவும், 400 கிலோ எடை கொண்டவனாகவும், ராட்சத உருவம் கொண்டவனாகவும் இருக்கலாம் என்றும் கணக்கிடப்பட்டுள்ளது. இது போன்ற ஆதி மனிதர்கள் 50 அடி உயரமுள்ள குகைகளில் வாழ்ந்திருக்கலாம் என்றும் ஆய்வில் கணிக்கப்பட்டுள்ளது.

## இந்தியாவின் அடுத்த ஜனாதிபதியை தெரிவு செய்வதில் கட்சிகள் தீவிரம்!

உலக நோக்கு

புதுடில்லி—

இந்திய ஜனாதிபதி அப்துல் கலாமின் பதவிக்காலம் முடிவடைய இன் னும் ஒன்றரை ஆண்டுகள் உள்ளன. இருப்பினும், அடுத்த ஜனாதிபதி யார் என்ற கேள்வி தற்போதே எழுந்துவிட்டது.

வாஜ்பாய் தலைமையிலிருந்த தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசின் பிரதிநிதியாகப் போட்டியிட்டு ஜனாதிபதியானவர் அப்துல்கலாம். அவர் 2002 ஜீலை 25ம் தேதி ஜனாதிபதியாகப் பதவியேற்றார்.

2007ம் ஆண்டுவரை பதவியில் நீடிப்பார். அவரது பதவிக் காலம் முடிவடைய இன்னும் ஒன்றரை ஆண்டுகள் இருந்தாலும் அடுத்த ஜனாதிபதியைத் தேடுவதற்கான பணிகள் தொடங்கிவிட்டன.

வாஜ்பாய் அரசின் பிரதிநிதியாக கலாம் தேர்ந்தெடுக்கப்பட்டதால் 2007ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் காங்கிரஸ் வேட்பாளர் வெற்றி பெறவேண்டும் என்பதற்காக இப்போதே தேடுதல் பணியைத் தொடக்கி விட்டது காங்கிஸ்.

கடந்த முறை துணை ஜனாதிபதி தேர்தலில் பைரான் சிங் ஷெகாவத்திடம் தோல்வி அடைந்த காங்கிரஸ் வேட்பாளர் ஷிண்டே ஜனாதிபதியாக விருப்பப்படுகிறார். ஜனாதிபதியாக வேண்டும் என்ற ஆசை துணை ஜனாதிபதியாகவுள்ள பைரான் சிங் ஷெகாவத்திடம் உள்ளது.

அவர் பா.ஜ.கட்சியைச் சேர்ந்தவராக இருந்தாலும் அனைத்துக் கட்சிகளையும் அரவணைத்து செல்பவர். எனவே, அனைத்து கட்சி தலைவர்களிடமும் தன்னை ஜனாதிபதியாக்க வேண்டும் என வேண்டுகோள் விடுத்தார்.

ஆனால் மேற்கு வங்க ஆளுனராகவுள்ள கோபால கிருஷ்ண காந்தியை ஜனாதிபதியாக்கலாமா என்று காங்கிரஸ் ஆலோசனை செய்து வருகின்றது.

இவர் மகாத்மா காந்தி மற்றும் ராஜாஜியின் பேரன். தமிழக கேடர் ஐ.ஏ.எஸ். அதிகாரியாக இருந்த கோபால கிருஷ்ண காந்தி, ஆர்.வெங்கட்ராமன், கே.ஆர்.நாராயணன் ஆகியோர் ஜனாதிபதியாக இருந்த போது செயலராகப் பணியாற்றியவர்.

காந்தி குடும்பத்தைச் சேர்ந்த கோபால கிருஷ்ண காந்தியை ஜனாதிபதியாக்குவது தான் மகாத்மா காந்திக்கு காங்கிரஸ் செய்யும் மரியாதை யாகும் என்று கட்சி வட்டாரங்களில் பேச்சு அடிபடுகிறது. சோனியா என்ன முடிவு எடுக்கப் போகிறாரோ?

## இயக்குனராகியுள்ள 9 வயதுச் சிறுவன்!

காளகஸ்தி—

கர்நாடக மாநிலம் பெங்களூரைச் சேர்ந்த கிஷன் (வயது 9) சின்ன வயதிலேயே தொலைக்காட்சி மற்றும் திரையரங்குக ளில் நிறைய சினிமா பார்ப்பான். தான் பார்த்த சினிமாக் கதையை பெற்றோர், உறவினர்களிடம் அப்படியே சொல்வான்.

அவனது இந்தச் சினிமாமோகத்தை அறிந்த பெற்றோர் அவனுக்கு சினிமாவை இயக்குவது எப்படி என்று அவ்வப்போது சொல்வதுண்டு.

இதனால் அவனது மனதில் சினிமாப் படங்களை இயக்கவேண்டும் என்ற ஆசை பிறந்தது. அவனது ஆசைக்கு தடைபோடாமல் பெற்றோர் தொடர்ந்து ஊக்கப்படுத்தினார்கள்.

சினிமாவை இயக்குவது பற்றிய பயிற்சியை முடித்த கிஷன் தற்போது கேராப் புட் பாத் என்ற கன்னடப் படத்தை இயக்குகிறான். இந்தப் படத்தில் பிரபல இந்தி நடிகர் ஜாக்கி ஷெராப் கதாநாயகனாக நடிக்கிறார்.


தற்போது இந்தப் படத்தின் படப்பிடிப்பு மும்பையில் நடந்து வருகிறது. ஜாக்கி ஷெராப்புக்கு கிஷன் நடிப்புச் சொல்லிக் கொடுப்பதைப் பார்க்க ஏராளமான பேர் திரண்டு வருகிறார்கள். காலை 7 மணிக்கே படப்பிடிப்புத் தளத்துக்கு வந்துவிடும் கிஷன் ஷூட்டிங் ஏற்பாடுகளைத் திட்டமிட்டு திறமையாகச் செயற்படுகிறான்.

இதுபற்றி கிஷன் கூறும்போது - நான் இயக்கும் கேராப் புட் பாத் படம் பெரியளவில் வெற்றிபெறும். இதில் ஜாக்கி ஷெராப் நான் எதிர்பார்த்ததை விட மிக நன்றாக நடிக்கிறார்.

நான் விரைவில் ஹொலிவுட் படம் ஒன்றை இயக்கத் திட்டமிட்டுள்ளேன். அந்தப் படம் உலகம் முழுவதும் ஹிட் ஆகும் என்ற நம்பிக்கை இருக்கிறது என்றான்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# கோட்டை ரயில்நிலையம் முன்பாக ஊடகவியலாளர்கள் ஆர்ப்பாட்டம்




கொழும்பு —

அவசரகாலச் சட்டத்தைப் பயன் படுத்தி தமிழ்ஊடகவியலாளர்கள் துன்புறுத்தப்படுவதற்கு எதிராக நேற்று மாலை கோட்டை ரயில் நிலையத்துக்கு முன்பாக ஆர்ப்பாட்டம் ஒன்று இடம் பெற்றது.

சுதந்திர ஊடக இயக்கம், தமிழ் ஊடகவியலாளர்கள் ஒன்றியம், முஸ்லிம் ஊடக அமைப்பு உட்பட ஐந்து ஊடக அமைப்புக்கள் இந்த ஆர்ப்பாட்டத்தைஏற்பாடு செய்திருந்தன.

இந்த ஆர்ப்பாட்டத்தின்போது தமிழ் ஊடக வியலாளர்கள் மீது அண்மைக்காலத்தில் மேற்கொள்ளப்பட்ட அச்சுறுத்தல்களை எதிர்த்து கண்டனக் குரல்கள் எழுப்பப்பட்டன.

இவ்வாறான சம்பவங்கள் ஜனநாயகத்தின் ஒரு அம்சமான ஊடக சுதந்திரத்துக்கு பங்கம் ஏற்படுத்தி உள்ளதாக கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன.

ஆர்ப்பாட்டத்தின்போது சுதந்திர ஊடக அமைப்பின் ஏற்பாட்டாளர் சுனந்த தேசப்பிரிய கருத்துத் தெரிவிக்கையில் - தமிழ் ஊடக வியலாளர்கள் மீது மேற்கொள்ளப்படும் அச்சுறுத்தல்கள் ஜனநாயகத்துக்கு பாதகத்தை ஏற்படுத்தும் எனத் தெரிவித்தார்.

## 24 ஈழத்தமிழ் அகதிகள் தமிழகத்துக்கு சென்றனர்

சென்னை —

இலங்கையிலிருந்து 24 அகதிகள் நேற்று அதிகாலை தனுஷ்கோடிக்குச் சென்றுள்ளதாக தமிழகத் தகவல்கள் தெரிவித்தன.

படகு மூலம் சென்ற இவர்களில் 8 ஆண்கள், 7 பெண்கள் மற்றும் 9 சிறுவர்கள் அடங்குகின்றனர். இந்த 24 அகதிகளும் மண்டபம் அகதி முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் அதிகாரி இராஜேந்திரன் தெரிவித்தார்.

இலங்கை இராணுவம் மக்கள் குடியிருப்புக்கள் மீது குண்டுத் தாக்குதல்களை நடத்தி வருகின்றது. இதில் எமது உறவினர்கள் ஐவர் காயமடைந்துள்ளனர் என்றும், இதனால் தாம் வேறு வழியில்லாமல் தமிழ்நாட்டுக்கு வருவதென முடிவெடுத்ததாக அகதிகளாக சென்ற மல்லிகா மற்றும் றெஜினா ஆகிய இரண்டு பெண்களும் ஊடகவியலாளர்களிடம் தெரிவித்தனர்.

வீட்டிலிருந்து வெளியேறி பல மணிநேரம் காட்டுப் பகுதியிலிருந்தே ஒவ்வொருவருக்கும் தலா ஐயாயிரம் ரூபா கொடுத்து படகு மூலம் இந்தியாவிற்கு வந்ததாக அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

## ஹஜ் யாத்திரிகர்களில் 380 பேர் நெரிசலில் பலி!

றியாத் —

சவூதி அரேபியாவிற்கு புனித ஹஜ் பெருநாள் தொழுகைக்காக யாத்திரை மேற்கொண்டவர்களில் 380 பேர் சன நெசரிசல் காரணமாக உயிரிழந்ததோடு 1000த்திற்கும் மேற்பட்டவர்கள் படுகாயமடைந்துள்ளனர்.

படுகாயமடைந்தவர்களில் பலர் கவலைக்கிடமான நிலையில் உள்ளதால் உயிரிழந்தவர்களின் தொகை மேலும் அதிகரிக்கலாமென அஞ்சப்படுகிறது. உயிரிழந்தவர்களில் 4பெண்கள் உட்பட 6பேர் இந்திய நாட்டவர் என அடையாளம் காணப்பட்டுள்ளது.

சவூதி அரேபியாவில் உள்ள புனித நகரமான மக்காவிற்கு உலகம் முழுவதிலும் உள்ள இருபது லட்சத்திற்கும் மேற்பட்ட யாத்திரிகர்கள் ஹஜ் பெருநாள் பயணம் மேற்கொண்டிருந்தனர்.

கடந்த ஒரு வாரகாலமாக நடைபெற்றுவந்த ஹஜ்ஜுப் பெருநாள் நிகழ்வில் நிறைவாக மினா என்ற இடத்தில் சாத்தானை கல்லால் எறிந்து கொல்லும் நிகழ்ச்சி நடைபெற்றது. இந்த நிகழ்வில் இஸ்லாமிய பாரம்பரி முறைப்படி அங்கு நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மூன்று தூண்களை நோக்கி கல் வீசுவதற்காக ஹஜ்ஜுப்பெருநாள் யாத்திரிகர்கள் முண்டியடித்துக் கொண்டிருந்த வேளையில் ஏற்பட்ட சன நெரிசலில் சிக்கியே 380பேர் வரை உயிரிழந்துள்ளனர்.

ஹஜ்ஜுப் பெருநாளின் இறுதிநாளான நேற்றையதினம் சூரியன் மறைவதற்கு முன்னர் சாத்தானை நோக்கி கல் வீசவேண்டும் என்ற ஆர்வத்துடன் யாத்திரிகர்கள் ஒருவரையொருவர் முந்திச்செல்ல முற்பட்ட வேளையிலேயே கீழே விழுந்து உயிரிழக்க நேரிட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

## வன்முறைச் சம்பவ...

முன்னதாக டிசம்பர் 16 ஆம் திகதி புங்குடுதீவைச் சேர்ந்த இளம் தமிழ்ப் பெண் இளையதம்பி தர்சினி பாலியல் வல்லுறவுக்குள்ளாக்கப்பட்டு படுகொலை செய்யப்பட்டு கடற்படை முகாம் அருகே கிணற்றில் வீசப்பட்டுள்ளார்.

பெண்கள் மீதான இத்தகைய பாலியல் வல்லுறவுப் படுகொலைகள் அதிகரித்து வருவதான தகவல்களால் சர்வதேச மன்னிப்புச்சபை ஆழ்ந்த கவலை கொள்கிறது.

இத்தயை படுகொலைகளுக்குப் பொறுப்பானவர்களை நீதியின் முன் நிறுத்துவதற்கு பாரபட்சமற்ற விசாரணைகளை மேற்கொள்ளக்கூடிய சுயாதீன விசாரணை ஆணைக் குழுவை அரசாங்கம் அமைக்கவேண்டும் என்று சர்வதேச மன்னிப்புச்சபை வலியுறுத்துகிறது. சர்வதேச மனித உரிமைச் சட்டங்களை மதித்துச் செயற்படுமாறு நாம் விடுதலைப் புலிகளையும் கேட்டுக் கொள்கிறோம்.

வட இலங்கையில் கடந்த 2 மாதங்களில் ஆகக்குறைந்தது 10 பேர் இராணுவத்தால் கைதுசெய்யப்பட்ட நிலையில் காணாமற்போயுள்ளனர். காணாமற்போனோர் தொடர்பாக உரிய பாரபட்சமற்ற விசாரணைகளை அரசாங்கம் நடத்தவேண்டும் என்றும் மனித உரிமை மீறல்கள் மீண்டும் காணாமற்போனோர் என்ற வடிவில் இலங்கையில் புத்துயிர் பெறுவதைத் தடுக்கவேண்டும் என்றும் நாம் வேண்டுகிறோம்.

மேலும் கடந்த சில வாரங்களில் யாழ்ப்பாணக் குடாநாட்டிலிருந்து 250 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் இடம்பெயர்ந்துள்ளதான செய்திகள் எம்மை மிகவும் கவலைக்குரியதாக்குகிறது. மீண்டும் முழு அளவிலான யுத்தம் உருவாகும் என்று மக்கள் அஞ்சுகின்றனர்.

பாதுகாப்பு நிலைமைகள் மிகக் கடுமையாக சீர்குலைந்திருப்பதுடன் சுனாமியால் இடம்பெயர்ந்து முகாம்களில் இருப்போர் மீளக்குடியேறுவதற்கான நிவாரணப் பணிகளிலும் இது பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது என்றும் சர்வதேச மன்னிப்புச்சபை தெரிவித்துள்ளது.

## தொண்டர்...

இதுவரை 3 ஆயிரத்துக்கும் மேற்பட்ட குடும்பங்கள் வன்னியை சென்றடைந்துள்ளன. வன்னி செல்லும் குடும்பங்களை தமிழர் புனர்வாழ்வுக்கழகம் பராமரித்து வருகின்றது.

இந்நிலையில் இடம்பெயர்ந்து வரும் மக்களுக்கு உதவிகளை பெற்றுக்கொடுப்பதற்கான கலந்துரையாடல் இன்று தமிழீழ விடுதலைப்புலிகளின் திட்டமிடல் செயலகத்தில் நடைபெறவுள்ளது.

மேலும் திருகோணமலையில் இராணுவக்கட்டுப்பாட்டுப் பகுதியிலிருந்து பாதுகாப்பான இடங்களை நோக்கி மக்கள் பெருமளவில் இடம் பெயர்ந்து வருவதும் குறிப்பிடத்தக்கது.

## சர்வ கட்சிக் கூட்டத்தில் கூட்டமைப்பு பங்கேற்காது

கொழும்பு —

எதிர்வரும் 19 ஆம் திகதி நடைபெறவுள்ள சர்வ கட்சி மாநாட்டில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கலந்து கொள்ளாது என அரசாங்கம் அறிவித்துள்ளது.

அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டில் நேற்று இந்தத் தகவலை அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா வெளியிட்டார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருடனான பிரதானகலந்துரையாடலை ஜனாதிபதி மேற்கொள்வார் என்றும் இது பற்றிய திகதி அறிவிக்கப்படவில்லை என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## விவசாயி...

குழுவிடம் அந்தப்பகுதி மக்கள் முறைப்பாடு செய்துள்ளனர்.

படையினரால் குறித்த விவசாயி கொல்லப்பட்டதைத் தொடர்ந்து, ஆத்திரமடைந்த மக்கள் அந்தப்பகுதியில் உள்ள படைமுகாமுக்கு முன்னால் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். (01)

## பருத்தித்துறை

நேற்றுப்பிற்பகல் 1.30மணியளவில் இடம் பெற்ற இந்தச்சம்பவத்தில் படுகாயமடைந்த வயோதிபரை படையினர் ஓட்டோ ஒன்றில் ஏற்றி மந்திகை வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றபோதும்- அவர் சிகிச்சையளிக்க முன்னரே இறந்துவிட்டார்.

இவரது சடலம் மேலதிக விசாரணைக்காக மந்திகை ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

படையினர் தவறுதலாக நடத்திய துப்பாக்கிச்சூட்டிலேயே இந்த வயோதிபர் காயமுற்றதாக படைத்தரப்பு தெரிவித்தது. (12,14)

## கிளைமோர் தாக்குதலில்...

வவுனியாவிலிருந்து 24கிலோ மீற்றர் தொலைவில் உள்ள செட்டிகுளத்துக்கும் அடப்பன் குளத்துக்குமிடையில் உள்ள சிலுவைச் சந்தியில் கிளைமோர்த் தாக்குதல் நடத்தப்பட்டது.

நெலுக்குளம், செட்டிகுளம் வீதிகள், மன்னார் - மதவாச்சி வீதியைச் சந்திக்கும் சிலுவைச் சந்தியில் பொலிஸ் சோதனை நிலையம் ஒன்று உள்ளது. இதன் அருகிலேயே கிளைமோர் குண்டு நேற்றுமாலை 4.15 மணியளவில் வெடித்தது.

22 கடற்படையினர் பயணம் செய்த தொடரணியில் மூன்றாவதாக சென்ற பஸ்ஸே கிளைமோர்த் தாக்குதலுக்குள்ளாகி பலத்த சேதமடைந்தது. இதையடுத்து கடற்படை வாகனங்கள் மீது துப்பாக்கி சூடு நடத்தப்பட்டதாகவும் தெரிய வருகிறது.

இந்தச்சம்பவத்தில் எட்டு கடற்படையினர் அந்த இடத்திலேயே உயிரிழந்தனர். மேலும் 14 கடற்படையினர் காயமடைந்தனர். இவர்களை மதவாச்சி வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லும் போது மேலும் இரு கடற்படையினர் உயிரிழந்ததால் - இந்தச் சம்பவத்தில் உயிரிழந்தோர் தொகை 10 ஆக உயர்ந்தது.

எஞ்சிய 12 கடற்படையினரும் படுகாயங்களுடன் ஆபத்தான நிலையில் அனுராதபுர வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

மதவாச்சியில் இருந்து 18 கிலோ மீற்றர் தொலைவில் நடைபெற்ற இந்தத் தாக்குதலில் 9 கடற்படையினர் கொல்லப்பட்டதாகவும் - ஆறு கடற்படையினர் காயமுற்றதாகவும் கடற்படையினர் உறுதி செய்தனர்.

இந்தச் சம்பவத்தில் சந்திரபால, தனபால, பெர்னாண்டோ, சுபசிங்க, பிரசாத் நிலந்த, குணதிலக, அத்துகோறள, விஜேசூரிய, அஜந்த ஆகிய கடற்படையினரே கொல்லப்பட்டவர்களாவர்.

இவர்களின் சடலங்கள் செட்டிகுளம் வைத்தியாசலையில் இருந்து மதவாச்சிக்கு எடுத்துச் செல்லப்பட்டு, பின்னர் விமானம் மூலம் கொழும்புக்குக் கொண்டு செல்லப்பட்டன.

இந்தத் தாக்குதலில் காயமுற்ற கடற்படையினரில் சிறிமேமன், கே.பெர்னாண்டோ, எம்.பெர்னாண்டோ, சந்திரசிறி, ரணதுங்க ஆகியோர் காயமுற்றோரில் அடங்குவதாகத் தெரியவருகிறது.

காயமுற்றவர்கள் ஆபத்தான நிலையில் இருந்ததால் உடனடியாக மதவாச்சி, அனுராதபுர வைத்தியசாலைகளுக்கு கொண்டு செல்லுமாறு உத்தரவிட்டதாக தாக்குதல் நடந்த இடத்திலிருந்து 1 கிலோ மீற்றர் தொலைவிலுள்ள நேரியகுளம் வைத்தியசாலை டொக்ரர் உபுல் ஜெயவர்த்தன தெரிவித்தார்.

இதன்பின்னர் காயமுற்ற படையினரை அனுராதபுரத்துக்குக் கொண்டு சென்ற படையினர் வழி வழியே துப்பாக்கிச் சூடு நடத்தியபடி சென்றதாகவும் கூறப்படுகிறது.

அதேவேளை இந்தத் தாக்குதலை அடுத்து - சம்பவம் நடந்த இடத்துக்கு அருகே உள்ள இராணுவத்தினரும் கடற்படையினரும் கண்மூடித்தனமாக துப்பாக்கிச் சூடு நடத்தினர்.

இதில் சிங்களவரான ஊர்காவற் படைச் சிப்பாய் ஒருவர் உயிரிழந்தார். ஜெயசிங்க (வயது 50) என்ற இவர் சிவிலுடையில் கடையொன்றில் பொருட்களை வாங்கிக் கொண்டிருந்தபோது படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டதாக தெரியவருகி றது.

இந்தச் சம்பவத்தில் மேலும் இரு பொதுமக்கள் படையினரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி படுகாயமடைந்தனர்.

அதேவேளை, சம்பவ இடந்து க்கு அருகே உள்ள வீரபுரம் கிராமத்துக்குள் நுழைந்து தேடுதல் நடத்திய படையினர் பொதுமக்களை கண்மூடித்தனமாக தாக்கியதாகவும் தகவல்கள் தெரிவித்தன. மன்னாருக்கான பிரதான விநியோகப்பாதையில் இடம்பெற்ற இந்தத் தாக்குதல் - படைத்தரப்பை பெரும் அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது.

இந்த தாக்குதல் பேசாலையில் நால்வரை கொன்று எரித்த சம்பவம், மற்றும் மேஜர் ஜெயானந்தனை படுகொலை செய்த சம்பவம் ஆகியவற்றுக்கு பழிவாங்கும் வகையிலேயே தாம் நடத்தியதாக பொங்கியெழும் மக்கள்படை உரிமை கோரியுள்ளதாக இணையத்தளம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

## பதிவு செய்ய...

கிளிநொச்சியில் கரடிப்போக்கு சந்தியில் உள்ள தமது அலுவலகத்தில் இந்தப்பதிவுகளை மேற்கொள்ள முடியுமென வடக்கு-கிழக்கு மனித உரிமைகள் செயலகம் அறிவித்துள்ளது.

## இந்த மாத...

இருப்பினும் பாலசிங்கமும் இத்தகைய அனுமதி கோரவில்லை என்று அரச தரப்பும், பாலசிங்கத்தின் வருகை உறுதிப்படுத்தப்படவில்லை என்று விடுதலைப் புலிகளின் ஊடகப் பிரிவும் தெரிவித்ததாக மேலும் அப் பத்திரிகை தெரிவித்தது.

## படையினரின் துப்பாக்கி...

இலக்காகி காயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

நேற்றுக்காலை 11 மணியளவில் பலாலி வீதியில் பரமேஸ்வராச் சந்திப் பகுதியில் கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸாரின் மீது அடையாளம் தெரியாத நபர்களால் மேற்கொள்ளப்பட்ட கைக்குண்டுத் தாக்குதலில் மூன்று பொலிஸார் காயமடைந்த அதே வேளை - இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டு 15 நிமிடத்துக்குள் தட்டாதெருச் சந்தியில் படையினர் மீது மேற்கொள்ளப்பட்ட மற்றுமொரு கைக்குண்டுத் தாக்குதலில் இராணுவச்சிப்பாய் ஒருவர் காயமடைந்ததாகத் தெரியவருகிறது.

எம்.பியரட்ண (வயது 45), வி.ஆரியவன்ச (வயது 38), அனுரட்ண (வயது 36) ஆகிய மூன்று பொலிஸ் கொன்ஸ்டபிள்களுமே காயமடைந்தவர்களாவர்.

காயமடைந்த பொலிஸாரும் இராணுவச் சிப்பாயும் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக பலாலி இராணுவ வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டனர்.

கைக்குண்டுத் தாக்குதல்கள் நடத்தப்பட்ட இரண்டு இடங்களிலும் சம்பவம் இடம்பெற்ற பின்னர் - இராணுவத்தினரும், பொலிஸாரும் சேர்ந்து தேடுதல் நடத்தியதுடன், அருகிலுள்ள வர்த்தக நிலையங்களில்பணிபுரிவோரை யாழ்ப்பாணத்தை விட்டு வன்னிக்குச் சென்று விடும்படி அச்சுறுத்தியதாகவும் தெரியவருகிறது.

இதேவேளை, போக்குவரத்தில் ஈடுபட்ட பொதுமக்களையும் வாகனங்களையும் பாரிய சோதனையிட்டதனால் அந்த வீதிகளூடான போக்குவரத்து சில மணி நேரம் பாதிக்கப்பட்டது.

A/L 2008
ஸ்ரார் கல்வி நிலையம்
கலை வர்த்தக வகுப்புக்கள்
ஆரம்பம்:- 15.01.2006 ஞாயிறு
வர்த்தகம்:- 9.00மணி கலை:- 4.00மணி
Acc:- சீலன்
Bu.st:- உமாகாந்
Tamil:- பாலா
Drama:- சுதன்
GEO: I.S.ஜெகன்
Eco:- மோகன்
Log:- R.P. சர்மா
H.cu:- சந்திரன்
CHR:- கொலின்ஸ்
P.Sc:- தீபன்

D.C.M
பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
A/L 2008
பொருளியல்
S.வரதராஜன்
ஆரம்பம் : 16.01.06 திங்கள் 3.30 (பு.நே)
(சீ-5005)

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 13.01.2006 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.